பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

# காலைக்கதிர்

Kālaikāthir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 27 திங்கட்கிழமை 10.06.2019 கதிர் 217

### இனி இது ரகசியம் அல்ல!

நான்கு மணி நேர இலங்கைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திருப்பதி திரும்பி விட்டார்.

கொழும்பில் பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்னால் இலங்கைப் படை பக்கம் 02

# தீவிரவாதத்தைக் கூட்டாக எதிர்கொள்ள மோடி - மைத்திரிபால நேற்று இணக்கம்!



கொழும்பு, ஜூன் 10

தீவிரவாதத்தைக் கூட்டாக எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்தில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய சந்திப்புக்குப் பின்னர், வெளியிடப்பட்டுள்ள அந்தப் பதிவில், பக்கம் 11

# புதுடில்லிக்கு வாருங்கள் தீர்வு பற்றிப் பேசுவோம்!

## கூட்டமைப்பினருக்கு கொழும்பில் வைத்து இந்தியப் பிரதமர் மோடி விசேட அழைப்பு



கொழும்பு, ஜூன் 10

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் விரிவான பேச்சுக்களை மேற்கொள்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் கொழும்பு வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

இதற்கான பயண ஏற்பாடுகளை உடனடியாகக் கவனிக்குமாறு இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகளையும் அவர் பணித்துள்ளார். பக்கம் 11

## கொழும்பு வந்த மோடி மஹிந்தவுடனும் பேச்சு



கொழும்பு, ஜூன் 10

கொழும்பு வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். பக்கம் 11

## சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கிறார் மைத்திரி?




கொழும்பு, ஜூன் 10

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தால், ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கத் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.தே.க. தரப்புக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனக் கூறப்படுகிறது. பக்கம் 11

## பௌத்த பேரினவாதிகளினால் இயக்கப்படுகின்றது இலங்கை!

### சிங்களத் தலைவர்களோ மௌனம் ஐ.நாவிடம் எடுத்துரைத்தார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 10

சிங்கள மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதனை நாம் விரும்பவில்லை. ஆனால், துரதிஷ்டவசமாக இந்த நாடு ஒரு சில சிங்கள – பௌத்த பேரினவாதி பக்கம் 11

## கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் மோடி அஞ்சலி!



கொழும்பு, ஜூன் 10

இலங்கைக்கு நேற்று வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உயிர்த்த ஞாயிறு தினமன்று ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான கொச்சிக்கடை புனித அந்தோனியார் பக்கம் 11

## மோடிக்கு குடை பிடித்த மைத்திரி



கொழும்பு, ஜூன் 10

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைக் கொட்டும் மழைக்கு மத்தி பக்கம் 11

## ரணில்தான் வரவேற்றார்





கொழும்பு, ஜூன் 10

இலங்கைக்கான குறுகிய நேரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக் கொழும்பு வந்த இந்தியப் பக்கம் 11

## கொழும்பில் மோடிக்கு எட்டடுக்குப் பாதுகாப்பு!



கொழும்பு, ஜூன் 10

கொழும்புக்கு நேற்று முற்பகல் வந்த இந்தியப் பிரதமர் பக்கம் 02

## மயிலிட்டி மக்களுக்கு உதவி ஏதும் இல்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 10

நீண்டகாலமாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட மயிலிட்டிப் பிரதேசத்தில் மீளக்குடிய பக்கம் 11

காலைக்கதிர் Kalaikathir



# கற்குவாரியில் தேங்கிய நீரில் மூழ்கி மாணவர்கள் இருவர் பரிதாபச் சாவு!

## வவுனியா பம்பைமடுவில் துயரச் சம்பவம்

வவுனியா, ஜூன் 10



வவுனியா பம்பைமடு கல்வெளிப் பகுதியில் கற்குவாரியாக பயன்படுத்தப்பட்ட இடத்தில் காணப்பட்ட நீர்த்தேக்கத்தில் நேற்று மதியம் குளிப்பதற்காகச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

பம்பைமடு இராணுவ முகாமுக்குப் பின்புறமாக உள்ள பகுதியில் கடந்த காலத்தில் கல்லுடைக்கும் குவாரி காணப்பட்டிருந்தது. எனினும் அந்தக் கிடங்கு மூடப்படாமையால் அதில் நீர் தேங்கியிருந்துள்ளது. இதனை கண்ணுற்ற பாடசாலை மாணவர்கள் சிலர் நேற்று அதில் குளிப்பதற்காக இறங்கியுள்ளனர்.

இதன்போது மாணவர்களில் நால்வர் குளிப்பதற்காக நீரில் இறங்கியபோது நால்வரும் நீரில் முழ்கியுள்ளனர். அவர்களின் அபாயக் குரல் கேட்டு அவர்களுடன் சென்ற நண்பர்கள் நீரில் முழ்கியவர்களை காப்பாற்றுவதற்கு முயன்றுள்ளனர். எனினும் இருவரை மாத்திரமே காப்பாற்ற முடிந்துள்ளது.

பின்னர் அவரது நண்பர்கள் அருகேயுள்ள இராணுவ முகாம் மற்றும் அயலவர்களுக்கு சம்பவத்தினை தெரியப்படுத்தியுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த அயல் கிராம இளைஞர்கள் நீரினுள் குதித்து பல மணிநேரப் போராட்டத்தின் பின்னர் இரு மாணவர்களையும் சடலங்களாக மீட்டெடுத்தனர்.

வவுனியா விபுலானந்த கல்லூரி மாணவனாக சந்திரகுமார் யூட் (வயது -18), பன்றிகெய்தகுளம் அ.த.க பாடசாலை மாணவனான முத்துராசா சுரேஸ் (வயது-15) ஆகிய இரு பாடசாலை மாணவர்களே சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.

சடலங்கள் பிரதே பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மேலதிக விசாரணைகளைப் பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

# காணாமற்போனோரின் உறவுகள் அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்பு



வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரண உரித்துப்படிவங்கள் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்த ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகேக்கு எதிராக வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வுகளை நிறைவு செய்து கொண்டு மாலை 4.40 மணியளவில் வன்னி விமானப்படைத்தளத்துக்கு ஹெலியில் வந்திறங்கிய அமைச்சர் தயா கமகே, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் காரணமாக கண்டி வீதி வழியாகச் செல்லாமல் பிரதான மணிக்கூட்டு வீதி வழியாக பசார் வீதி சென்று இலுப்பையடி, வைத்தியசாலைச் சுற்றுவட்டம் ஊடாக நகரசபை மைதானத்தை அடைந்தார்.

இதன்போது காணாமற்போனோரின் உறவுகள் கோசமெழுப்பியவாறு தமது போராட்டத்தை மேற்கொண்டனர். வீதியை வழி மறிக்க அவர்கள் முயன்றபோது பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

போராட்ட களத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். முன்னோக்கிச் சென்ற உறவுகளின் போராட்டத்தை தடுத்து நிறுத்தினர் பொலிஸார்.

எனினும் நேற்றைய சமுர்த்தி நிகழ்வு திட்டமிடப்பட்டவாறு இடம்பெற்றது. (ஐ)

# மன்னார் சமுர்த்தி உரித்து வழங்கும் நிகழ்வில் கம்பம் சரிந்து விழுந்தது!

## மூவர் காயமுற்று வைத்தியசாலையில்

மன்னார், ஜூன் 10



மன்னாரில் சமூர்த்தி நிவாரண உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வில் அரங்கத்தில் நாட்டப்பட்ட கம்பமொன்று சரிந்து விழுந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சமூர்த்தி பயனாளிகளுக்கான சமூர்த்தி நிவாரண உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இடம் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தற்காலிகக் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. எனினும், சரியான நேரத்தில் நிகழ்வு ஆரம்பிக்கவில்லை.

நிகழ்வுக்காகக் காலையிலேயே அழைத்து வரப்பட்ட மக்கள், மணித்தியாலக் கணக்காகப் பட்டினியுடன் காத்திருந்தனர். பிற்பகல் 2.30 மணிக்கே நிகழ்வு ஆரம்பித்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசிய கீதம் நிறைவடைந்து சிறிது நேரத்தில், மின்குமிழ் பொருத்த நடப்பட்ட இரும்பு கம்பம் ஒன்று சரிந்து மக்கள் மீது விழுந்தது.

இதனால் வயோதிபர் ஒருவரும், வயோதிபப் பெண்கள் இருவருமாக மூவர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தற்போது வீச ஆரம்பித்துள்ள கடுமையான காற்றினாலேயே கம்பம் சரிந்து விழுந்தாகக் கூறப்படுகிறது. அதேபோல, கொட்டகையின் மேல் கூரைப்பகுதியும் காற்றினால் சேதமாகியது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்பதற்கு மழைக்கு மத்தியிலும் வந்திறங்கிய இந்தியப்பிரதமருக்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குடை பிடித்தமை நேற்றைய வரவேற்பு நிகழ்வில் ஹைற-லைட்'!

இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவதற்கு சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புத் தரப்பினருக்கு பத்து முதல் பதினைந்து நிமிடங்கள்தாம் கிடைக்கும் என்றும் –

குறைந்த பட்சம் இந்தச் சந்திப்பை ஆரம்பமாக வைத்துக் கொண்டு, புதுடில்லியில் பிரதமர் மோடியைச் சந்தித்து ஊடாட்டத்தைத் தொடரும் ஏற்பாட்டைக் கூட்டமைப்புச் செய்து கொள்ள வேண்டும் என்றும் –

நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அதுதான் நடந்தது. பத்து நிமிடம் கூட கூட்டமைப்பினருக்கு கிடைக்கவில்லை. எட்டு நிமிடங்கள்தான் கிடைத்தன. புதுடில்லியில் ஊடாட்டத்தைத் தொடரும் ஏற்பாட்டைக் கூட்டமைப்பினர் செய்து கொண்டனர்.

கிடைத்த ஓரிரு நிமிட நேரத்தில் பலாலி விமான நிலையத்தை இந்திய உதவியுடன் சர்வதேச விமானத்தளமாகப் பயன்படுத்தும் திட்டத்தை பிரதமர் மோடி காதில் போட்டு, *“அதை அப்படியே விரைந்து செய்வோமே...!”* – என்று தமது அதிகாரிகளைப் பார்த்துப் பிரதமர் மோடியைக் கொண்டு கூறவைத்து, அவரது இசைவைப் பெற்றுக் கொள்ளும் ஏற்பாட்டை கூட்டமைப்பினர் செய்து கொண்டனர்.

★ ★ ★

திங்கள் இரவு நடந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தில், விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வை நிறுத்தாவிட்டால் இனி அமைச்சரவைக் கூட்டத்துக்கே வரமாட்டேன்.” – என்ற சாரப்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை செய்தார் என்று பரபரப்பான செய்திகள் வெளியாகின.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடு நாடாளுமன்றத்துக்குரிய சுயாதீன அதிகாரம், அதில் ஜனாதிபதி தலையிட்டு அதிகாரம் செலுத்த இடமளிக்க மாட்டோம். தெரிவுக்குழு அமர்வு கட்டாயம் தொடரும்' – என்று நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

அப்படி அதன் அமர்வு தொடர்ந்துநடந்தால் இனி அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த முடியாமல் போய் விடுமோ என்ற அங்கலாய்ப்பு சில வட்டாரங்களில் உள்ளது.

அது குறித்து விடயமறிந்த சட்ட விற்பன்னர்களின் கருத்தைக் கேட்டேன்.

*“அமைச்சரவையைக் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உரியது என்று அரசமைப்போ வேறு சட்டங்களோ கூறவில்லை. ஜனாதிபதி, அமைச்சரவைக்குத் தலைவர். அதன் ஓர் உறுப்பினர். அவ்வளவே. அவரது இணக்கத்துக்கு மாறான தீர்மானத்தை ஏனைய பெருலும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் அமைச்சரவை எடுக்கலாம். அத்தகைய தீர்மானத்துக்கு கூட அமைச்சரவை கூட்டுப் பொறுப்பு என்ற அடிப்படையில், அமைச்சரவைக்கு வெளியில் இணங்கிப் போக வேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு.*

*“ஜனாதிபதியின் விருப்பதற்கு மாறான தீர்மானத்தைக் கூட அமைச்சரவை எடுக்கலாம் எனும் போது, அவர் விரும்பாவிட்டால் அமைச்சரவையைக் கூட்ட முடியாது என்ற பேச்சு செல்லுபடியற்றது. ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்துக்கு சமுகம் தராவிட்டால் பிரதமர் தலைமையிலோ, பிறி தொருவர் தலைமையிலோ அமைச் சரவை கூட முடியும்.”* – என்று சட்ட விற்பன்னர்கள் கூறுகின்றனர்.

நாடாளுமன்றத்துடன் முரண் பட ஜனாதிபதி விரும்புவாராயின் ஒரு கட்டத்தில் அவரை மீறி அமைச் சரவைக் கூட்டங்கள் நடைபெறும் நிலைமை உருவானாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ★ ★

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலை அடுத்து நாட்டில் அவசர காலச்சட்டம்பிரகடனப்படுத்தப்பட்டு, அது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது யாரும் நாடாளுமன்றத்தில் அதனை எதிர்க்கவில்லை. அது உண்மைதான்.

ஆனால், அவசரகால நிலைமையின் கீழ், அது தொடர்பான சட்ட விதிகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது சில தரப்புகள் அவற்றைக் கடுமையாக எதிர்த்தன. அந்தச் சட்ட விதிகளுக்கு எதிர ாக உயர்நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மாற்றுக் கொள்கைக்கான மையம் சார்பில் ஒரு வழக்கும், மற்றொரு சிங்களவர் சார்பில் ஒரு வழக்கும் தொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு இன்று உயர்நீதிமன்றத்துக்கு வருகின்றது. மாற்றுக் கொள்கைக்கான மையத்தின் சார்பில் இன்று நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகின்றார்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்ட போது அதனை நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனும் எதிர்க்கவில்லை.

ஆனாலும், அந்த அவசரகால நிலைமைகளின் பின்னர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகளின் சிலரத்துக்களைத் தாங்கள் கடுமையாக எதிர்க்கின்றனர் என அவர் கூறிவந்தமை தெரிந்ததே.

இன்று நீதிமன்றத்தில் அந்த விதிகளை எதிர்த்து வாதிடவே அவர் முன்னிலையாகுகின்றார்.

- மின்னல் -

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நரேந்திர மோடிக்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தலைமையில் விசேட பாதுகாப்புப் பிரிவு ஏற்கனவே கொழும்பில் தங்கியிருந்து பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்து வந்தது.

பிரதமர் மோடி கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்குச் செல்லும்போது அந்தப் பகுதியில் தொலைபேசி சேவைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக முடக்கப்பட்டிருந்தன. எட்டுக்குப் பாதுகாப்புப் போடப்பட்டு வீதிகள் பல மூடப்பட்டன.

பாதுகாப்புக் காரணங்களால் கொச்சிக்கடை தேவாலயத்துக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுரை கூறப்பட்டபோதும் அவற்றை நிராகரித்து அங்கு செல்லவேண்டுமென மோடி வலியுறுத்திச் சென்றார் என உயர் மட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# அமைச்சர் மனோ இன்று முல்லைத்தீவுக்கு விஜயம்

## முல்லைத்தீவு நீராவியடி விநாயகர் ஆலய விவகாரம் குறித்து ஆராய்வதற்கு

கொழும்பு, ஜூன் 10
சர்ச்சைக்குரிய திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலய விவகாரம், முல்லைத்தீவு நீராவியடி விநாயகர் ஆலய விவகாரம் தொடர்புகளில் இன்று திங்கட்கிழமை திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு அமைச்சர் மனோகணேசன் நேரடி விஜயம் செய்ய உள்ளார்.

திருகோணமலை மாவட்டச் செயலாளர் என்.ஏ. ஏ. புஷ்பகுமாரவுக்கும், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனுக்கும், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் விடுத்துள்ள பணிப்புரைகளின்படி இரண்டு மாவட்ட செயலகங்களிலும் அனைத்துத் தரப்புகளையும் அழைத்து இரண்டு கூட்டங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் காலை 8.30 மணிக்கு திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று விநாயகர் ஆலய விவகாரம் தொடர்பிலும், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு நீராவியடி விநாயகர் ஆலய விவகாரம் தொடர்பில் இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (ஐ)

# முஸ்லிம் பாடசாலைகளில் சோதனை நடவடிக்கைகள்




வவுனியா, ஜூன் 10
வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளிலும் நேற்றுத் தீவிர சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் நோன்பு பெருநாள் விடுமுறையைத் தொடர்ந்து இரண்டாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைக்காக இன்று முஸ்லிம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் பாடசாலைச் சமூகத்தினருடன்பொலிஸாரும்இணைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளிலும் தீவிர சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது பாடசாலை வளாகம் மற்றும் பாடசாலையின் கட்டடங்கள் என்பன தீவிர சோதனையிடப்பட்டன. (ஐ -100)

# பஸ்ஸின் மிதிபலகை உடைந்து நடத்துநர், பயணி உயிரிழப்பு!





கொழும்பு, ஜூன் 10
கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்றின் மிதி பலகை உடைந்து வீழ்ந்ததில் அதில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர் என மாவனல்லைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் நடத்துநரும் மற்றுமொரு பயணியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மட்டக்குளி டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸின் மிதிபலகையே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளது.

கடுகண்ணாவைவளைவுப் பாதையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையிட்டு கைது செய்யப்பட்ட பஸ்ஸின் சாரதி மாவனல்லை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ஐ)

# ஒலுமடு விபத்தில் இளைஞன் பலி!

முல்லைத்தீவு, ஜூன் 10
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்

மாங்குளத்தில் இருந்து முள்ளியவளைக்கு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் ஒலுமடுப் பகுதியில் உள்ள வீதி வளைவில் திரும்ப முற்பட்ட வேளையில் வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

இந்த விபத்தில் 17 ஆம் கட்டை நெடுங்கேணியைச் சேர்ந்த படுகாயமடைந்த காத்தலிங்கம் துஷ்யன் (வயது- 27) என்ற இளைஞன் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

அவரோடு பயணித்த முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பாஸ்கரன் (வயது 57) என்பவரும் காயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற மாங்குளம்



பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

# ஹெரோய்னுடன் ஒருவர் வவுனியாவில் கைதானார்

வவுனியா, ஜூன் 10
வவுனியாவில் தேக்கவத்தைப் பகுதியில் ஹெரோய்ன் தூளினைதனது உடைமையில் மறைத்து வைத்திருந்தார் என ஒருவரை இன்று காலை கைது செய்துள்ளார்கள் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை தேக்கவத்தைப் பகுதியில் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஹெரோய்ன் தூளைத் தனது உடைமையில் வைத்திருந்த 45 வயது உடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர் எனவும், அவரிடமிருந்து 2 கிராம் 170மில்லிக்கிராம் ஹெரோய்ன் தூள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சஹ்ரான் குழு பற்றி தகவல்கள் வெளியிட்ட முஸ்லிம்கள் தெரிவுக்குழுவினால் அழைப்பு

கொழும்பு, ஜூன் 10
சஹ்ரான் உள்ளிட்ட பயங்கரவாதக் குழு தொடர்பில் உளவுத்தகவல் வழங்கிய நான்கு பேர், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தகவல் வழங்கிய முஸ்லிம் அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவுக்குழுவின் உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழு நாளை 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடவுள்ளது.

இதன்போது, உளவுத் தகவல்களை வழங்கியவர்களிடம் சாட்சிப் பதிவுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எந்த காலப்பகுதியில் தகவல்கள் வழங்கப்பட்டன, அது குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பன குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளதாக நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

# இந்திய ஐ.எஸ். சந்தேகநபர்களுடன் இலங்கையில் இருந்து பேசிய ஐவர்!

கொழும்பு, ஜூன் 10
ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய ஐந்து இலங்கையர்களின் தொலைபேசி இலக்கங்களை இலங்கையுடன் இந்தியா பகிர்ந்துள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலையாளிகள் இருவருடன் தொடர்பில் இருந்த சில இந்தியர்கள் பற்றிய தகவல்களையும், இந்தியா பகிர்ந்துள்ளது.

இந்தியாவின் தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள் இலங்கைக்கு நேரடியாக வந்து உயிர்த்த ஞாயிறு விசாரணைகளில் உதவி புரிந்தனர்.

இலங்கை ஐ.எஸ். வலையமைப்புடன் தென்னிந்தியாவை சேர்ந்தவர்களும் நெருக்கமான தொடர்பைப் பேணியமையால், இலங்கைத் தாக்குதல் விவரத்தை இந்தியா ஆரம்பத்திலேயே கண்டறிந்திருந்தது.

இந்த விசாரணைகளில், இந்தியாவிலிருந்து இரண்டு ஐ.எஸ். அமைப்பின் தொடர்பிடங்களிலிருந்து இலங்கையுடன் தொடர்பு கொண்டமை கண்டறியப்பட்டுள்ளது. தொலைபேசிவழியாகவோ, சமூக ஊடகங்கள் வழியாகவோ இந்தியாவிலிருந்து தொடர்பு கொள்ளப்பட்ட 4 அல்லது 5 இலங்கை தொலைபேசி இலக்கங்களை, இந்தியாவின் தேசிய புலனாய்வு நிறுவனம் கண்டறிந்துள்ளது. அது தொடர்பான தகவல்கள் இலங்கை புலனாய்வுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து, இந்தியாவிலுள்ள சில சந்தேகத்திற்கிடமான ஐ.எஸ். வலையமைப்புக்களின் வெளிநாட்டு அழைப்புக்களை இந்தியாவின் தேசிய புலனாய்வு நிறுவனம் ஆய்வுக்குட்படுத்தியபோது, கோயம்புத்தூர் சந்தேகநபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

பின்னர் கேரளாவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். ரியாஸ் அபூபக்கர் என்ற அந்த நபர், சஹ்ரானின் பேச்சுக்களைக் கேட்டு, தற்கொலை தாக்குதல் நடத்த தயாராக இருந்தமை விசாரணைகளில் தெரிய வந்திருந்தது.

இதேவேளை, தற்கொலைதாரிகளான இன்சாப், இல்ஹாம் சகோதரர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்த சில சந்தேகநபர்களின் விவரங்களையும் இந்தியாவின் தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

வர்த்தகர் இப்ராஹிம் ஹாஜியாரின் மகன்களான அவர்களுடன், இந்த இந்தியர்கள் எப்படியான தொடர்பை வைத்திருந்தார்கள் என்பது இன்னும் உறுதியாகவில்லை. ஏனெனில், ஹாஜியாரின் குடும்பம் இந்தியாவில் கணிசமான வர்த்தகத் தொடர்பையும் பேணியுள்ளது. ஹாஜியார் தற்போது விசாரணையில் உள்ளமையால், அந்த தொடர்பு வர்த்தக நோக்கமுடையதா அல்லது ஐ.எஸ் தொடர்பா என்ற விசாரணைகள் நடந்து வருகின்றன.

இலங்கை தற்கொலைதாரிகளுடன் நெருக்கமாக இருந்த ஆதில் அமீஸ் ஏற்கனவே இந்தியாவின் கண்காணிப்பில் இருந்தவர். ஆதில் அக்ஸ் என்ற பெயரில் ஐ.எஸ். ஆதரவு இணையத் தொடர்பாடல் குழுக்களில் அங்கம் வகித்து வந்துள்ளார். இந்த குழுக்கள் இஸ்லாம் கியூ அண்ட் ஏ என அழைக்கப்படுகின்றன. ஆதிலுடன் 3 வரையான இந்தியர்கள் தொடர்பில் இருந்துள்ளனர்.

அதில் உபீத் மிஸ்ரா, காசிம் ஆகிய இருவரும் அகமதாபாத்தில் தாக்குதல் நடத்த முயன்ற சந்தேகத்தில் 2017 இல் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேவை தெற்கில் துணிச்சலான தலைமை

**ஆட்சி மாற்றம் ஒன்றின் ஊடாக நாட்டின் இருண்ட யுகத்தின் நிலைமையை மாற்றியமைத்து, நீண்ட காலமாக இழுபடும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சி 2015 ஜனவரியில் முன்னெடுக்கப்பட்டபோது அதில் தமிழர்களும் முழுமையாகப் பங்குகொண்டனர்.**

**தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என இந்த நாட்டின் சிறுபான்மை இன மக்களும் பெருவாரியாக ஒன்றிணைந்து துணிச்சலுடன் அந்த முயற்சியில் முழுமையாகப் பங்கு கொண்டமையால் அந்த நேர இருண்ட யுக ஆட்சிக்கு முடிவுகட்ட முடிந்தது.**

**மக்களின் துணிச்சலான முடிவினால் இதுவரை அதிகாரப் பிடியில் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த ராஜபக்ஷக்களின் கெடுபிடிக்கு முடிவு கட்ட முடிந்தது.**

**ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் அதிகார லகானை கையில் எடுக்கக் கூடியதான தலைகீழ் மாற்றத்துக்கு மக்களின் ஒன்றுபட்டு நின்ற துணிச்சலே காரணமாயிற்று.**

**ஆனால் அத்தகைய துணிச்சலான முடிவு மூலம் மக்களினால் முன்னுக்குக் கொண்டு வரப்பட்ட இந்த இரண்டு தலைவர்களுமே அரசியல் துணிச்சல் மிக்கவர்களாக இல்லை என்பதுதான் அவர்களைத் தெரிவு செய்து பதவியில் அமர்த்திய மக்களின் கவலையாக இருக்கின்றது.**

**இந்த விடயத்தை இப்போது வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.**

**மருதங்கேணியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் உரையாற்றிய அவர் *"நீண்ட காலமாக உள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு வருவதற்கான அரசியல் துணிச்சல் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை."* என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கின்றார்.**

**சுமார் நான்கரை வருடங்களுக்கு மேல் இந்த இரண்டு அரசத் தலைவர்களுடனும் அரசியல் ஊடாட்டம் என்ற குப்பையைக் கொட்டிக் கொண்டிருந்த கூட்டமைப்பு , இப்போது இவர்கள் இருவருமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற தமது முக்கிய பணிக்கு லாயக்கற்றவர்கள் – பொருத்தமற்றவர்கள் – என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கின்றார்கள்.**

**இப்போதாவது இந்த யதார்த்த நிலைமை உணர்ந்து, ஒப்புக் கொண்டு, பகிரங்கமாகப் பேச முற்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயம்.**

**இது, இதெல்லாம் செய்வார்கள் என்று முற்கூட்டியே இந்த இரு தலைவர்களிடமும் எழுத்திலே பெற்றிருக்கலாம், பெற்றிருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும் என்றெல்லாம் இப்போது விமர்சனம் செய்வதில் அர்த்தமில்லை.**

**அரசியல் துணிச்சலற்ற பேடிகளிடம் எழுத்தில் எழுதி வாங்கியிருந்தால் என்ன, வாங்காவிட்டால் என்ன, எல்லாம் ஒன்றுதான்.**

**எழுத்தில் வாங்கியிருந்தால், அந்த ஆவணத்தைக் கட்டம் கட்டி சட்டத்தில் தொங்க விட்டு அழகு பார்த்திருக்கலாம். அவ்வளவே.**

**இலங்கை விடயத்தில் சர்வதேசப் பங்களிப்பு, மத்தியஸ்தம் போன்றவற்றுடன் எழுத்தில் சொல்லப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்பாடுகள், அறிவிப்புகள் போன்றவையே காற்றோடு கலந்து காணாமல் போயின என்பதே எமது அரசியல் வரலாற்றுப் பட்டறிவு.**

**பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், இலங்கை – இந்தியா ஒப்பந்தம், ஒஸ்லோ உடன்பாடு (அறிவிப்பு) என்று பல்வேறு ஆவணங்களை நாம் எழுத்தில் கண்டாயிற்று. ஆனால் பலன் ஒன்றுதான்.**

**இந்தத் தசாப்தத்தின் முற்பகுதியில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழு 17 சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டது. ஒவ்வொரு சுற்றுப் பேச்சினது விவரங்கள் பதியப்பட்டு, அடுத்த சுற்றின் போது முதல் சுற்றுப் பேச்சின் அறிக்கைகள் கூட வாசித்து அங்கீகரிக்கப்பட்டு பதியப்பட்டன. அவற்றுக்கான ஆவணங்கள் இப்போதும் தெளிவாக உள்ளன. கடைசி சுற்றுப் பேச்சுக்காக கூட்டமைப்புக் குழு இரண்டு நாள்கள் ஜனாதிபதி செயலகத்துக்குப் போய் பார்த்திருந்து, காத்திருந்து விட்டு வந்ததுதான் மிச்சம். அரசுப் பிரதிநிதிகள் குழு பேச்சுக்கு வரவேயில்லை.**

**ஆனால், இந்த உண்மைகள் எல்லாவற்றையும் கிணற்றுக்குள் போட்டு மூழ்கடித்து மறைத்து விட்டதாகக் கருதி, என்னுடைய ஆட்சியில் இந்தத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண வாருங்கள் என்று நான் அழைத்தும் தமிழர் தரப்பு கூட்டமைப்புத் தலைமை வரவே இல்லை என்று இப்போது திரும்பத் திரும்ப குதர்க்கம் பேசுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ.**

**முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல புரட்டு வேலை மேற்கொள்ளும் தென்னிலங்கைச் சிங்கள, பௌத்த பேரினவாதத் தலைவர்களோடு எழுத்தில் உறுதிமொழி பெறுவதும், உடன்பாடு செய்வதும் அர்த்தமற்றவை.**

**தேசிய இனப்பிரச்சினைக்கு கௌரவமான இணக்கமான நீதி, நியாயமான நின்று, நிலைக்கக் கூடிய தீர்வு முயற்சி ஒன்றை துணிச்சலுடன் முன்னெடுக்கக் கூடிய பௌத்த, சிங்களத் தலைமை ஒன்றை தெற்கில் அடையாளம் கண்டு அதனுடன் பேசித் தீர்க்க முயல்வதே இனியும் இருக்கக் கூடிய ஒரே மார்க்கமாகும்.**

# ரிஷாத்துக்கு எதிரான ஆதாரங்களை வெளியிட சுதந்திர முன்னணி தயார்

கொழும்பு, ஜூன் 10

பயங்கரவாதத்துக்கு துணை போன விவகாரம் குறித்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக தம்மிடம் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன எனவும் அவற்றை நாளை குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

இதனால் ரிஷாத் தொடர்பான பல்வேறு விடயங்கள் வெளியுலகுக்கு தெரியவரும் என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்தபோது அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸாமில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த அமைச்சர்கள், தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவே இன்று தங்களது பதவிகளில் இருந்து இராஜினாமா செய்து கொண்டுள்ளனர். இதனைத் தற்போது அனைத்து சமூகத்திற்காகவும் மேற்கொண்டதாக அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் குற்றங்கள் முன்வைக்கப்படவில்லை. மாறாக ரிஷாத் பதியுதீன், ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலி, முஜிபூர் ரஹ்மான் போன்றோர் மீதே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ரிஷாத் பதியுதீன் மீது படிந்த இரத்தக்கறையை, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் பூசும் வகையில்தான் முஸ்லிம் பிரதிநிதிகள் இராஜினாமா செய்துள்ளனர்.

இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரவூப் ஹக்கீமுக்கு இராஜினாமா செய்ய வேண்டிய தேவை ஏன் உள்ளது?

அதாவது, அரசியலில் அவர் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டுமெனில், இனவாத சக்தியொன்று அவசியமாகும். இதற்காகவே, அவர் இராஜினாமா செய்துகொண்டுள்ளார்.

இது ஓர் அரசியல் விளையாட்டாகவே கருதப்படுகிறது. முஸ்லிம் சமூகத்திற்கு இதனால் ஏற்பட்டுள்ள அவப்பெயருக்கு இராஜினாமா செய்த அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் பதில் கூறவேண்டும்.

ரிஷாத் பதியுதீன் நல்லவர் போல கருத்து வெளியிடுகிறார். இவருக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தகவல்கள் எமக்கு தற்போது கிடைத்துள்ளன.

அந்தவகையில், நாளை எமக்குக்கிடைத்த இந்தத்தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அப்போது அனைத்து விடயங்களும் வெளிவரும்.

பயங்கரவாதத்தைப் பாதுகாக்க அவர் எவ்வாறு செயற்பட்டார் என்பதெல்லாம் மக்கள் அதன்பின்னர் அறிந்துகொள்வார்கள்–என்றார். (ஐ)

# சூதாட்டத்தில் ஈடுபட்ட 6 பேர் கைது 7 லட்சம் ரூபா பணமும் பறிமுதல்

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஹோட்டல் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட குழுவொன்றை பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

இதன்போது 4 பேர் தப்பி ஓடிய நிலையில், 6 பேரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு 7 இலட்சத்து 52 ஆயிரத்து 270 ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக மட்டு தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம்.டி.தீர்கா வத்துர தெரிவித்தார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ்.சமந்த தலைமையில் புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது தப்பி ஓடிய ஒருவரின் கையடக்கத் தொலைபேசியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வாழைச்சேனை, கல்முனை, கல்லாறு, சாய்ந்தமருது, ஆரையம்பதி, புதூர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

# சுற்றுலாத் தடையை நீக்கியது நெதர்லாந்து

கொழும்பு, ஜூன் 10

இலங்கைக்கான சுற்றுலாத் தடையை நெதர்லாந்து நீக்கியுள்ளது.

நெதர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகளை அடுத்து அந்த நாட்டுப் பிரஜைகள் இலங்கை வருவதற்கான தடையை நீக்கியதாக இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உயிர்த்தஞாயிறு அனர்த்தங்களை அடுத்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பல வெளிநாடுகள் தங்கள் பிரஜைகளை இந்தக் காலப்பகுதியில் இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என ஆலோசனை வழங்கி வருகின்றன.

இந்நிலையில், இலங்கையில் தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பி வருகின்றது.

நெதர்லாந்து போன்று ஏனைய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என இலங்கை எதிர்பார்ப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# கணவனை இரும்பால் தாக்கி கொலை செய்தார் மனைவி!

கொழும்பு, ஜூன் 10

ஹற்றன்–கொழும்பு பிரதான வீதியின் வட்டவளைப் பகுதியில் கணவனை இரும்பால் தாக்கிக் கொலை செய்த மனைவியை வட்டவளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நேற்று முன் தினம் இரவு வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மதுபோதையில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த கணவனை மனைவி இரும்பால் தலை பகுதியை தாக்கிக் கொலை செய்துள்ளார். அதன்பின்னர் அந்தப் பெண் வட்டவளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ஆறுமுகன் ஜெயராமன் (வயது–44) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணைகளுக்காக ஹற்றன் நீதிமன்ற நீதிவான் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

11.06.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப. 2.44 வரை
திதி : நவமி மு.இ. 9.49 வரை
இராகுகாலம் : 2.52 – 4.22
சுப நேரம் : 10.22 – 11.52

# மக்கள் குடியிருப்பில் பரவிய தீ கட்டுக்குள்!



## தீயணைப்பு வாகனத்தின் நீர் தீர்ந்ததால் மக்கள் விசனம்
## பணிகளுக்கு இடையூறாக இருந்த அரசியல் பிரதிநிதிகள்

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி நகரில் நீதிமன்றுக்குப் பின்புறமாக மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் ஏற்பட்ட தீ கரைச்சிப் பிரதேச சபையினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் நீதிமன்றுக்குப் பின்புறமாக சிறைச்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியில் சிறைக் கைதிகளை கொண்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் போது ஏற்கனவே வீழ்த்தப்பட்டு காய்ந்திருந்த ஆலமரத்துக்கு தீ வைக்கப்பட்டபோது அது பெரியளவில் சுவாலை விட்டு எரிந்தது. அத்தோடு மக்களின் குடியிருப்புகளில் உள்ள வான் பயிர்களுக்கும் பரவியது.



இதனையடுத்து கரைச்சிப் பிரதேசசபையின் தீ அணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தீயைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

இருப்பினும் கரைச்சி பிரதேச சபையின் தீ அணைக்கும் செயற்பாடு அங்கிருந்த மக்களிடம் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆரம்பத்தில் தீ அணைக்கும் இயந்திரம் மட்டுமே அந்த இடத்திற்கு வருகை தந்து தீ அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது நீர் தீர்ந்து விட்டது. இதனால் தீ அணைக்கும் பணி இடைநடுவில் முப்பது நிமிடங்களுக்கு மேல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் அறிவிக்கப்பட்டு நீர்த்தாங்கிகள் மூலம் நீர் கொண்டுவரப்பட்டு ஒரு மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்தச் செயற்பாடு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

அத்தோடு தீ அணைக்கும் வாகனத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏறி நின்றுகொண்டு பயிற்றப்பட்ட தீ அணைக்கும் வீரர்களுக்கு இடையூறாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இதனால் விரக்தியடைந்த தீ அணைப்பு வீரர்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவருக்கும் தனது கடமைகளை மேற்கொள்ள முடியாத சூழல் காணப்பட்டிருந்தது.

கூடியிருந்த மக்கள் மத்தியில் தாங்கள் மக்கள் பணியாற்றுவதாக காட்டும் பொருட்டு தீ அணைப்பு வீரர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் செயற்பட்டமை மக்களிடம் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது.

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற முன்னாள் வன்னி எம்.பி கைது!

கொழும்பு, ஜூன் 10

தனது வீட்டுக்குச் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றிருந்த வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மின்சார சபையின் திடீர்ப் பரிசோதனைக்குழு நேற்றுமுன்தினம் வவுனியாவில் உள்ள பல இடங்களிலும் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுபவர்கள் தொடர்பாகச் சோதனையில் ஈடுபட்டிருந்தது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் தனது வீட்டுக்குச் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தை அண்மைக் காலமாகப் பெற்று வந்துள்ளமையை மின்சார சபையினர் கண்டறிந்துள்ளனர். இதனையடுத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்த மின்சார சபையினர் பொலிஸாரிடம் கையளித்து வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இதனையடுத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இறுதிக்கிரியை நடந்து கொண்டிருந்தபோது சடலத்தைக் கொண்டு சென்றது பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

விபத்தில் காயமடைந்து, சிகிச்சை பயனின்றி உயிரிழந்தவர் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்காமல் இறுதிக்கிரியைகளைச் செய்து கொண்டிருந்தவேளை பொலிஸார் தடுத்து நிறுத்தி சடலத்தை எடுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நாவலடி ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் நடைபெற்றது.

அப்பகுதியைச் சேர்ந்த பெரியான் நாகேந்திரம் (வயது – 67) என்பவர் 4 மாதங்களுக்கு முன்பு சைக்கிள் செல்லும்போது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானார். இதனையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவருக்கு யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்கப்பட்டது.

கடந்த 4 மாத காலமாகப் படுக்கை நோயாளியாகச் சிகிச்சை பெற்று வந்தவரை கடந்த செவ்வாய்க்கிழமை உறவினர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்ற நிலையில் இரண்டு நாள்களின் பின்னர் கடந்த வியாழக்கிழமை வீட்டில் உயிரிழந்துள்ளார். அதனை அடுத்து மறுநாள் வெள்ளிக்கிழமை இறுதி கிரியைகளுக்கு ஏற்பாடு செய்து இறுதி கிரியைகளும் நடைபெற்றன.

அதனை அறிந்து வீட்டுக்குச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் , விபத்து வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளபோது , தமக்கு அறிவிக்காது இறுதிகிரியைகளுக்கு ஏற்பாடு செய்த உறவினர்களை கடுமையாக எச்சரித்து சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றிலும் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி மன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து மரண விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க பணித்தார். (ஐ)

## இராணுவப் பாதுகாப்புடன் வவுனியா நரசிங்கர் உற்சவம்



வவுனியா, ஜூன் 10

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று முன் தினம் மிகவும் அமைதியான முறையில் இராணுவப் பாதுகாப்புடன் நடைபெற்றது.



வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள், பாற்செம்புகள், தீச்சட்டி, காவடிகள் போன்றன வவுனியா நகர வீதி வழியாக ஆலயத்தைச் சென்றடைந்தன.

அத்துடன் ஆலயத்தில் அன்னதானம் இடம்பெற்றதுடன், பொங்கலுக்கான மடப்பண்டமெடுக்கும் கிரியைகள்



இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம் வந்து மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சப்பறத்தில் வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு நரசிங்கப் பெருமானின் அருளைப் பெற்றுக் கொண்டனர். (ஐ – 100)

## கடும் காற்றுடன் கூடிய காலநிலை தொடரும்!

### யாழ்ப்பாணத்தில் மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

நாடு முழுவதும் தற்போது காணப்படும் காற்றுடன் கூடிய காலநிலை அடுத்த சில நாள்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் பொத்துவில் பிரதேசத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 – 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும். மேல், தென், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

களுத்துறை, காலி, மாத்தறை, மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்–23 சீனியர் லேன் 14/8 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைகக்கொண்ட ஆதனம் நாகமுத்து வேலுப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து வேலுப்பிள்ளையும் பெண் முத்தியும் பிரசித்த நொத்தாரிசு சு.பதஞ்சன முகதாவில் 1951.06.01 ஆம் திகதியிடப்பட்ட 2342ம் இலக்க சீதன உறுதி மூலம் வேலு சின்னத்துரை பெண் பூமணிக்கு வழங்கியுள்ளார். வேலு சின்னத்துரையும் பெண் பூமணியும் பிரசித்த நொத்தாரிசு இ.சிவசுப்பிரமணியம் முகதாவில் 1961.06.05 திகதியிடப்பட்ட 3709 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தம்பிமுத்து கனகரத்தினத்திற்கு அறுதியாக ஒப்படைத்துள்ளார். தம்பிமுத்து கனகரத்தினம் பிரசித்த நொத்தாரிசு ச.கனகசபாபதி முகதாவில் 1974.07.03 ஆம் திகதியிடப்பட்ட 7488ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கனகரத்தினம் மகள் ரஞ்சினி தேவிக்கு வழங்கியுள்ளார்.(தும்பிமுத்து கனகரத்தினத்தின் சீவிய உரித்துக்கு அமைவாக வழங்கியுள்ளார்)

பின்னர், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு இலக்கம் 6/6 சீனியர் லேன் ஆறுமுகம் பாலசிங்கம் பெண் நாகேஸ்வரியும் முதலாம் புறமாகவும் ஆறுமுகம் இரத்தினசிங்கமும் பெண் ரஞ்சினிதேவியும் இரண்டாம் புறமாகவும் பிரசித்த நொத்தாரிசு இராசரத்தினம் முகதாவில் 1978.09.04ம் திகதியிடப்பட்ட 372ம் இலக்க பிரிவிடல் உறுதி நிறைவேற்றப்பட்டது.

குறித்த ஆதனத்தை ஆறுமுகம் பாலசிங்கமும் பெண் நாகேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு சே.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 1990.05.27 ஆம் திகதியிடப்பட்ட 682ம் இலக்க அறுதி உறுதி மூலம் வேலணை கிழக்கு சரவணை சிவசம்புவும் பெண் புஸ்பகலாதேவிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர். சிவசம்புவும் பெண் புஸ்பகலாதேவியும் பிரசித்த நொத்தாரிசு திருமதி S.இளங்கோவன் முகதாவில் 1991.1.05ம் திகதியிடப்பட்ட 3195 இலக்க அறுதி உறுதி மூலம் இராமசாமி பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவிக்கும் வழங்கியுள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தில் இருக்கும் இராமசாமி பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவி பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் முகதாவில் 2011.02.18ம் திகதியிடப்பட்ட 1045 இலக்க நன்கொடை உறுதி மூலம் தங்களில் ஒருவர் இறக்கும் பட்சத்தில் இருப்பவரின் சீவிய உரித்துக்கு அமைவாகவும் தாங்கள் இருவரும் விரும்பியவாறு எந்த நேரத்திலும் காரணம் எதுவுமின்றி நன்கொடை உறுயை அழிப்பதற்கும் தமக்குரிய பங்கை தமது விரும்பியபடி உரிமையாக்கி ஆட்சி செய்வதற்கும் உள்ளிட்ட வேறுபல நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தமது அற்ரேனித்தத்துவக்காரர் தர்மலிங்கம் இராசையா மூலம் தங்கள் புதல்வன் இராமலிங்கம் கரனுக்கு வழங்கியுள்ளனர்.

எனினும் இராமசாமி பாலசிங்கம் மற்றும் சகுந்தலாதேவி பாலசிங்கம் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சண்முகம் இராமலிங்கம் முகதாவில் நிறைவேறிய 2017.03.25 ஆம் திகதியிடப்பட்ட 1120 இலக்க அழித்தல் உறுதி மூலம் மேற்குறித்த 1045ம் இலக்க நன்கொடை உறுதியை இரத்து செய்து வலுவற்றதாக்கிக் கொண்டனர். பின்னர் அதே நொத்தாரிசு சண்முகலிங்கம் இராமலிங்கம் முகதாவில் 25.03.2017 ஆம் திகதி 1121ம் இலக்கத்தில் ஓர் பிரகடனப்படுத்தல் உறுதியையும் நிறைவேற்றியுள்ளனர்.

**1ம் ஆதன அட்டவணை**

1.வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, தற்காலம் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட J/100 வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவு குசவன் புலமும் நெல்வேலி வளவும் குளி 17.1 வீடும் கிணறும் பயிர்வகைகளும் இது 1978 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி நிலஅளவையாளர் சீ.இரத்தினசிங்கம் அவர்களால் 735ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 எனச்சூட்டப்பட்டுள்ளது. இந்தக்குளி 17.1க்கு எல்லைகள் கிழக்கு A.S.சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தின் ஆதனம் மேற்கு நன்கொடை கொடுநர்களுக்குரிய குறித்த படத்தில் 1 ஆம் துண்டு தெற்கு ஒழுங்கை இதடங்கலும் ஆனால் இதற்குள்ளிருக்கும் கிணற்றின் 1 ஆம் துண்டாகிய மேற்கெல்லை ஆதனத்திற்குரிய (கீழ் காணும் இரண்டாம் ஆதனத்திற்குரிய) பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீக்கல்.

2.மேற்படி வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை குசவன் புலமும் நெல்வேலி வளவும் குளி 17.1 ஒரு பகுதி வீடும் பயிர் வகைகளும் இது 1978 ஆ ம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி நில அளவையாளர் சீ.இரத்தினசிங்கம் அவர்களால் 735 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்தக்குளி 17.1 கு எல்லைகள் கிழக்கு மேற்குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட 1 ஆம் ஆதனமும் வீட்டின் பகுதியும் வடக்கு வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தின் ஆதனம் மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம் தெற்கு 2 ஆம் ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, தற்காலம் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட J/100 வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவு, குசவன் புலமும் நெல்வேலி வளவும் இது 1978ம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி நில அளவையாளர் சீ.இரத்தினசிங்கம் அவர்களால் 735ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 (17.1 குளி) எனவும் துண்டு 1 (17.1குளி) எனவும் சுட்டப்பட்டிருந்தது. சமீபத்தில் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ.கந்தசாமி அவர்களால் மீளளவை செய்யப்பட்டு 2017.02.27ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட 3575ம் இலக்கம் கொண்ட புதிய நிலஅளவைப்படத்தில் அவ்விரு துண்டுகளும் ஒரே துண்டாக 1 எனச் சுட்டப்பட்டுள்ள அதே வேளை அதன் மொத்த விஸ்தீரணம் பரப்பு நில இலாச்சம் இரண்டு குளி ஐந்து தசம் இரண்டு மூன்று (நில இலா.2 குளி 5.23) அல்லது 0.0589 ஹெக்டயர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.இந்த நில இலாச்சம் 2 குளி 5.23 கொண்ட துண்டு 1 மற்றும் வீடும் கிணறும் ஆகியவற்றுக்கு குறித்த 3575 ஆம் இலக்கப்படத்தின் பிரகாரம் எல்லைகள்

கிழக்கு:-தாமோதரம்பிள்ளை அருளானந்தத்தின் ஆதனம்.

வடக்கு:-ஜயம்பிள்ளை பூபாலசிங்கத்தின் ஆதனம்

மேற்கும், தெற்கும்:- ஒழுங்கை இதடங்கலும்.

தற்போது பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதமானது பாலசிங்கம் பெண் சகுந்தலாதேவி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர், மாநகரசபை**

# 13 பேருடன் காணாமற்போன விமானம் குறித்து தகவல் தந்தால் ஐந்து லட்சம் ரூபா சன்மானம்!

இடாநகர்,ஜுன்10

பதின்மூன்று பேருடன் மாயமான விமானம் பற்றி தகவல் தருவோருக்கு 5 லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என விமானப்படை அறிவித்துள்ளது.




இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஏ.என்.32 ரக விமானம் ஒன்று கடந்த 3 ஆம் திகதி 13 பேருடன் அசாமில் இருந்து அருணாசல பிரதேசத்துக்குப் புறப்பட்டது. அது கிளம்பிய அரை மணி நேரத்தில் அருணாசல பிரதேசத்தில் சீன எல்லையோரம் மாயமானது. இந்த விமானத்தை தேடும் பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டன.

இந்தத் தேடும் பணிகளில் விமானப்படை விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஈடுபட்டு உள்ளன. இதைப் போல இராணுவம், இந்தோ–திபெத் படையினர் மற்றும் மாநில பொலிஸார் உள்ளூர் மக்களுடன் இணைந்து அருணாசல பிரதேசத்தின் சியாங் மாவட்டத்தை மையமாகக் கொண்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு உள்ளனர்.

இந்தப் பணிகள் நேற்று ஏழாவது நாளை எட்டிய போதும், மாயமான விமானம் குறித்து எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. எனவே தேடும் பணிகளில் கூடுதல் ஹெலிக்கொப்டர்கள் மற்றும் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

இந்தநிலையில் மாயமான விமானம் புறப்பட்ட ஜோர்காட் விமானப்படை தளத்துக்கு விமானப்படை தளபதி தனோவா நேற்று முன்தினம் சென்றார்.

அங்கு அவர் விமானத்தைத் தேடும் பணிகளை ஆய்வு செய்தார். அப்போது அவரிடம் தேடும் பணிகள் மற்றும் கள நிலைவரம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் அவர் அந்த விமானத்தில் பயணம் செய்த அதிகாரிகளின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இதற்கிடையில் மயமான விமானம் தொடர்பாக தகவல்களை அளிப்பவர்களுக்கு 5 லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என இந்திய விமான படையின் ஏர் மார்ஷல் ஆர். டி. மாத்தூர் அறிவித்துள்ளார்.

# நல்லூர் மங்கையர்க்கரசி ம.வி. அதிபர் கஜேந்திரன் இன்று ஓய்வு



யாழ்ப்பாணம்நல்லூர்மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் மகேசன் கஜேந்திரன் (கஜன்) தமது 35 வருட கல்வித்துறை சேவையின் பின்னர் தமது அறுபதாவது வயதில் ஓய்வு பெறுகின்றார்.

யாழ்ப்பாணம், நீராவியடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கஜன் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை (யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். யாழ். பல்கலைக் கழகத்தில் கலைமாணி படிப்பில் தேர்ச்சி பெற்றவர்.

1984 ஜனவரியில் பயிற்றப்படாத ஆங்கில ஆசிரியராகச் சேவையில் நுழைந்த அவர், 1990 ஜனவரி முதல் பயிற்றப்பட்ட விஞ்ஞான, கணித ஆசிரியரானார் 2002 ஜனவரி முதல் போட்டிப் பரீட்சை மூலம் அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டார். ஓய்வு பெறும் போது அவர் தரம் 2 அதிபராவார்.

1984 முதல் 1989 வரை வவுனியா பாலமோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் 1989 முதல் 1992 வரை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் 1992 முதல் 2002 வரை யாழ். இந்துக் கல்லூரியிலும் அவர் சேவையாற்றினார். எனினும் 1996 இடப்பெயர்வை அடுத்து 2002 வரை மல்லாவி மத்திய கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா ஸ்ரீராமபுரம் ம.வி. ஆகியவற்றில் அவர் தற்காலிகமாக இணைப்புப் பெற்றிருந்தார்.

2006 முதல் 2008 வரை திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தினதும், 2008 முதல் நேற்று வரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் அதிபராக அவர் அருஞ் சேவையாற்றினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், தொண்டமானாறு வெளிக்கள நிலையம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகியவற்றில் செயற்பாட்டு உறுப்பினரான கஜன் இயற்கை பண்பாட்டு மரபுப் பேணுகை மையம் (இமை) மற்றும் தலையாழி இந்திரா சனசமூக நிலையத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இதழியல் துறையில் விற்பன்னரான அவர் 'விளக்கு', 'நங்கூரம்' ஆகிய மாத சஞ்சிகைகளிலும் 'யாழ் இந்து' செய்தி மடலினதும் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தவர்.

சிறந்த ஓவியரான கஜனின் கைவண்ணத்தில் பல சஞ்சிகைகள், புத்தகங்களின் அட்டைப்பட ஓவியங்கள் பிரசுரமாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நாடகத்துறையில் ஈடுபாடு கொண்ட கஜன் வடமாகாணக் கல்வித் திணைக்கள வெளியீடான 'வன்மம்' குறும்படம், இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியின் தயாரிப்பான 'சங்கிலியன்', வெளிவாரி பரீட்சை அளிக்கையின் 'வெடியரசன்' ஆகிய நாடகங்களிலும் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளார்.

கஜனின் சேவையைப் பாராட்டி வாழ்த்துரைக்கும் நிகழ்வு இன்று மாலை 5.30 மணி முதல் யாழ்ப்பாணம், இராமநதன் வீதி, சரஸ்வதி மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (உ)

# தீவிரவாதத்தை கட்டுப்படுத்த பாகிஸ்தானுக்கு அமெ.அழைப்பு

அமைதிப் பேச்சுக்கு வருமாறு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பிரதமர் மோடிக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ள நிலையில், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே தெற்காசியாவில் அமைதியை நிலைநிறுத்த முடியும் என்று பாகிஸ்தான் அரசுக்கு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை கடிதம் அனுப்பியுள்ளது.

மோடி பதவியேற்றதும் அதனை வாழ்த்தி முதல் கடிதம் எழுதிய இம்ரான் கான் இரண்டாவது எழுதிய கடிதத்தில் காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வு காண விரும்புகிறார் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் பாகிஸ்தானின் அழைப்பை இந்தியா ஏற்கனவே நிராகரித்துள்ளது. தீவிரவாதமும் பேச்சும் ஒன்றாக நடக்க முடியாது என்று இந்தியா தனது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை பாகிஸ்தானுக்கு அனுப்பிய கடிதத்தில் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. முக்கியத் தீவிரவாதத் தலைவர்களை கைது செய்ய வேண்டும். அவர்களின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். இந்தியா உள்ளிட்ட எந்த ஒரு நாட்டின் மீதும் வன்முறையைச் செலுத்துவதைத் தடுக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# 3 இராணுவ அதிகாரிகள், சிப்பாய் பாக். வீதியோரக் குண்டுக்குப் பலி!



இஸ்லாமாபாத்,ஜுன்10

பாகிஸ்தானில் நடந்த குண்டு வெடிப்புத் தாக்குதலில் 3 அதிகாரிகள் உட்பட நான்கு இராணுவத்தினர் பலியாகினர்.

பாகிஸ்தானில்ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய வடக்கு வாஜிரிஸ்தான் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக தீவிரவாதிகளின்தாக்குதல்சம்பவங்கள்நடந்த வண்ணமாக உள்ளன. இவற்றில் இதுவரை பாதுகாப்பு படை வீரர்கள் 10 பேர் பலியாகினர். 35 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த நிலையில், அங்கு வெள்ளியன்று கார்கமர் பகுதியில் இராணுவ அதிகாரிகளும், வீரர்களும் ஒரு வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சாலையோரம் புதைத்து வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த ஐ.இ.டி. வெடிகுண்டு வெடித்தது. அதில் இராணுவ வாகனம் சிக்கி வெடித்து சிதறியது.

அந்த வாகனத்தில் இருந்த 3 அதிகாரிகள், ஒரு வீரர் என 4 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். பலியானவர்கள் லெப்டினண்ட் கேணல் ரஷித் கரீம், மேஜர் மோயீஸ் மக்சூத், கப்டன் ஆர்ப் உல்லா மற்றும் சிப்பாய் ஹவல்தார்ஜாகீர்எனஅடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்த வொரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.

இந்த தாக்குதலையடுத்து அந்தப் பகுதியை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்தனர். தேடுதல் வேட்டையும் முடுக்கி விடப்பட்டுள்ளது

# புதிய சகாப்தம் படைக்கும் சீன – ரஷ்ய ஒப்பந்தங்கள்




ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் பரஸ்பர ஒப்பந்தங்கள் பன்னாட்டளவில் புதிய சகாப்தம் படைக்கும் அளவிற்கு மாறியிருக்கின்றன.

சீனா அதிபர் ஜி ஜின்பிங் அண்மையில் ரஷ்யாவில் மூன்று நாள் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பரஸ்பர வளர்ச்சி திட்டங்களில் பங்கேற்பது, மனிதவள ஆற்றலை பகிர்ந்து கொள்வது, அறிவுசார் தளங்களைப் பரஸ்பரம் பகிர்வது, உலகளவில் அமைதியை ஏற்படுத்தத் தோளோடு தோள் நின்று பொறுப்புணர்வோடு செயல்படுவது என்பன போன்ற தலைப்புகளில், சீனா - ரஷ்யா இடையே உடன்பாடுகள் எட்டப்பட்டன.

மேலும் 5ஜி தொலைபேசி சேவை தொழில் நுட்பத்தை ரஷ்யாவுடன் பகிர்ந்து கொள்ளவும் சீனா முன்வந்துள்ளது. இதனால் இரு நாடுகளின் உறவுகள் புதிய சகாப்தம் படைக்கும் அளவிற்கு மாறியிருக்கிறது.

# மெக்ஸிக்கோ பொருள்கள் மீதான வரி விதிப்பை ரத்து செய்தது அமெ.

மெக்ஸிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்பட இருந்த மேலதிக வரி ரத்துச் செய்யப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோ எல்லை வழியாக சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழைபவர்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத விதத்தில் கடந்த மே மாதம் ஒரு லட்சத்து 26 ஆயிரமாக அதிகரித்தது.

இதையடுத்து, சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க தவறியதாக கூறி, மெக்ஸிக்கோவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் கார்கள், பழங்கள் உள்ளிட்ட பொருள்களுக்கு ஒவ்வொரு மாதமும் 5 சதவீத வரி வீதம் 25 சதவீதம் வரை அதிகரிக்கப்படும் என்றும், இன்று 10 ஆம் திகதி முதல் இது நடைமுறைக்கு வருவதாகவும் டிரம்ப் முன்னர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் மெக்ஸிக்கோ அரசு அமெரிக்காவுடன் பேச்சு நடத்தியதை அடுத்து, இப்பிரச்சினையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க மெக்ஸிக்கோ அரசு கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததை அடுத்து, வரி விதிப்பு ரத்து செய்யப்படுவதாக டிரம்ப் அறிவித்தார். அமெரிக்க வேளாண் பொருள்களை வாங்கவும் மெக்ஸிக்கோ ஒப்புதல் அளித்துள்ளதாக டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

# ஏமனில் மசூதிக்குள் புகுந்து சூடு! ஐவர் பலி; மூவர் கடத்தப்பட்டனர்

ஏடன்,ஜுன்10

ஏமன் நாட்டில் மசூதியில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் அதிபர் ஆதரவு படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இதில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 30 லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

அங்கு அவ்வப்போது பயங்கரவாத தாக்குதல்களும் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தாலியா மாகாணத்தில் அசாரிக் மாவட்டத்தில், ஒரு மசூதியில் கடந்த வெள்ளியன்று தொழுகை நடந்து கொண்டிருந்தது. அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் தானியங்கி துப்பாக்கிகளுடன் ஒரு வாகனத்தில் வந்து இறங்கினர். அவர்கள் இறங்கிய வேகத்தில், மசூதியில் நுழைந்து, தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இதனால் அங்கிருந்தவர்கள் பதறியடித்தவாறு நாலாபுறமும் ஓட்டம் எடுத்தனர்.

இதற்கிடையே தாக்குதல்களை நடத்தியவர்களும், அங்கிருந்து ஓட்டம் பிடித்து விட்டனர். அவர்கள் தங்களுடன் 3 பேரை கடத்திச்சென்றனர்.



தொழுகை சமயம் வெறியாட்டம்

இந்த தாக்குதலின்போது, தொழுகையில் ஈடுபட்டிருந்த 5 பேர் உயிரிழந்தனர். சிலர் படுகாயம் அடைந்தனர். தாக்குதல் குறித்த தகவல் அறிந்ததும் பொலிஸாரும், மீட்புப் படையினரும் அங்கு விரைந்து வந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு, ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் யார் என உடனடியாக தெரிய வரவில்லை. இது பற்றி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# துருக்கிக்கு எவ் - 35 ரக போர் விமானங்களை விற்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்தது அமெரிக்கா!

## ரஷ்யாவிடமிருந்து ஏவுகணை வாங்குவதால் சீற்றமாம்

துருக்கி நாட்டுக்கு எவ் -35 ரக போர்விமானங்களை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்தை அமெரிக்கா ரத்துச் செய்துள்ளது.

அமெரிக்காவிடம் எவ் – 35 ரக போர்விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்துள்ள துருக்கி, ரஷ்யாவின் எஸ் – 400 ரக ஏவுகணைகளை வாங்கவும் ஒப்பந்தம் செய்திருந்தது.

இந்நிலையில் ரஷ்ய ஏவுகணைகளை வாங்கக்கூடாது என்ற அமெரிக்காவின் எச்சரிக்கையை துருக்கி ஏற்க மறுத்து விட்டது. இதன் எதிரொலியாக துருக்கி நாட்டுக்கு எவ் – 35 ரக போர்விமானங்களை விற்பனை செய்யும் ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ள அமெரிக்கா, அவ்வகை விமானங்களை இயக்குவதற்காக துருக்கி விமானிகளுக்கு வழங்கி வரும் பயிற்சியையும் நிறுத்தியுள்ளது.



மேலும் பயிற்சிக்காக அமெரிக்காவில் தங்கியுள்ள துருக்கி விமானிகளை, ஜுலை 31ஆம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறவும் அறிவுறுத்தியுள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, துருக்கியைப் போலவே ரஷ்யாவிடம் எஸ் – 400 ரக ஏவுகணைகளை வாங்க ஒப்பந்தம் செய்துள்ள இந்தியாவையும் எச்சரிக்கும் வகையில் அமைந்துள்ளதாக வல்லுநர்கள் கருதுகின்றனர்.

ரஷ்யாவுடன் இந்தியா ஒப்பந்தம் செய்வதற்கு முன்னரே, எஸ் – 400 ரக ஏவுகணைகளை அந்நாட்டிடமிருந்து வாங்க வேண்டாம் என வலியுறுத்தும் வகையில் அமெரிக்கா மறைமுகமாக இந்தியாவை எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மத்தியில் உள்ளவர்கள் எமக்கு தேவையானதை தீர்மானிக்க முடியாது!

## மைத்திரிக்கு விக்கி பதிலடி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவது போல் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் போதுமானவரை பகிர்ந் தளிக்கப்படவில்லை என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவது போல் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் போதுமானவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வாராந்த கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

**கேள்வி:-**13ஆவது அரசியல் திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரப் பகிர்வு வடக்குக்குப்போதும் என்று எமது நாட்டின் ஜனாதிபதி இந்திய ஊடக வியலாளர்களிடம் அண்மையில் கூறியுள்ளார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** அதைத் தீர்மானிப்பது அவர் அல்லர். எமது மக்களே! அவரைப் பதவிக்குக் கொண்டுவர நாங்கள் 2014 இல் 2015 இல் பாடுபட்டது அவர் எங்களுடன் சேர்ந்து பேசி எமது அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவார் என்று தான். எம்முடன் பேசித்தான் இந்த முடிவை எடுத்தாரா அல்லது அடிவருடிகளின் பேச்சைக் கேட்டு இவ்வாறு கூறியுள்ளாரா?

13ஆவது திருத்தச் சட்டம் 1987 இல் வரும் போதே இரு நாட்டாரும் இணங்கிக் கொண்ட பல விடயங்களை அப்போதைய இலங்கை அரசாங்கம் முக்கியமாக ஜனாதிபதி ஜயவர்தன எமது நாட்டிற்குள் வர விடவில்லை. அப்போதைய ஜனாதிபதி ஜயவர்தனாவைத் தெரிந்த எனது நண்பர் ஒருவர் நரியின் மறுபிறப்பு என்றே அவரை வர்ணிப்பார். 20ம் நூற்றாண்டின் நரி (20th Century Fox) என்று வெளிப்படையாகவே அக்காலத்தில் அவர் அழைக்கப்பட்டார்.

கிட்டத்தட்ட இந்தியாவின் மாகாண அரசுகளின் அதிகாரங்கள் இலங்கையின் வடகிழக்கு மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என்றே அப்போதைய கருத்துப் பரிமாற்றத்தின்போது முடிவு எடுக்கப்பட்டது. அதுநடக்கவில்லை. அதனால்தான் 28.10.87 ஆம் திகதியன்று தமிழ்த்தலைவர்கள் திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஆகியோர் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு எமக்குத் தருவதாகக் கூறிய அதிகாரங்கள் தரப்படவில்லை என்ற பாணியில் ஒருமித்து கடிதமொன்றை எழுதி இருந்தார்கள்.

ராஜீவால் கிழவருடன் போட்டி போட முடியவில்லை. இப்போது கிடைப்பதை எடுப்போம் பின்னர் பார்ப்போம் என்று இருந்து விட்டார் ராஜீவ்காந்தி அவர்கள். ஆகவே ஜனாதிபதி சிறிசேன கூறுவது போல் அதிகாரங்கள் போதுமானவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒன்பது மாகாணங்களுக்கும் ஏற்புடைத்தாக்கியமையால் எமக்கெனக் கிடைக்கவிருந்த அதிகாரப் பகிர்வுகதைதெருவுக்கு இழுத்துவரப்பட்டு அடுத்த மாகாணம் அதைக் கேட்கவில்லை, நீயேன் கேட்கிறாய்? போன்ற கேள்விகளால் எம்மவரின் குரல்கள் அடக்கப்பட்டன.

பேராசிரியர் பீரிஸ் அவர்கள் (அவர் மீது எங்களுக்கு மரியாதை இருந்த காலத்தில்) கூறினார் – ஒரு கையால் தந்து மறுகையால் திரும்ப வாங்கும் சட்டமே 13 ஆவது திருத்தச்சட்டம் என்று.

முன்னைய கிழக்கு மாகாண முதலமைச்சர் ஒருவர் கூறினார் இந்தச் சட்டத்தின் கீழ் மலசலகூடம் கழுவுபவரைக் கூட நியமிக்க எனக்கு உரித்தில்லை என்று. இவற்றிற்கு மேலதிகமாக வேறு சில முக்கியமான விடயங்களை ஜனாதிபதி மறந்து விட்டார் போல் தெரிகின்றது.


சில வருடங்களுக்கு முன் அனுராதபுரத்தில் என்னையும் உள்ளடக்கிய ஒன்பது முதலமைச்சர்களும் அவரைச் சந்தித்தபோது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் குறைபாடுகள் பற்றி விலாவாரியாக அவருக்கு எமது முதலமைச்சர்கள் அனைவராலும் தெரிவிக்கப்பட்டது. அவரது ஆதரவாளர் ஆகிய பேல ஜயரட்ண (அப்போதைய வடமத்திய மாகாண முதலமைச்சர்) ஒரு மாகாணத்தை ஆளும் சகல அதிகாரங்களும் எமக்கு வழங்கப்பட வேண்டும். இதுவரையில் அவ்வாறு வழங்கப்படவில்லை. மத்தியின் உள்ளீடலே அதிகம். ஆனால் சமஷ்டி வேண்டாம் என்றார்.

அதுபற்றிப் பார்ப்பதாகக் கூறினார் ஜனாதிபதி. குடிகாரன் பேச்சுப் போல் அது மறக்கப்பட்டுவிட்டது. பேலவுக்கு நான் பின்னர் கூறினேன் சமஷ்டி இல்லாமல் உங்களுக்குத் தரப்படும் மாகாண உரித்துக்களை எவ்வாறு நிரந்தரமாக்கப் போகின்றீர்கள்? தரப்படுவனவற்றை ஒற்றையாட்சியின் கீழ் திரும்பப் பெறலாமே? என்றேன். அதற்கு அவர் அதுபற்றி எனக்குத் தெரியாது. சமஷ்டி வேண்டாம். முழு அதிகாரப் பகிர்வும் வேண்டும் என்றார். சமஷ்டி என்ற சொல்லை உங்கள் தலைவர்கள் தகாத வார்த்தை ஆக்கிவிட்டார்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்று விட்டேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தால் 1987ல் தந்தவற்றைப் பற்றி ஜனாதிபதி கூறுகிறார். அங்கு தரப்பட்ட எத்தனை அதிகாரங்கள் தற்போது இல்லை என்பது பற்றித் தெரியாமல் தான் அவ்வாறு கூறுகின்றாரா அல்லது தெரிந்தும் தமிழ் மக்களை வாங்க முடியும் என்ற எண்ணத்தில் இவ்வாறு கூறியுள்ளாரா?

உதாரணத்திற்கு வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அவர் இன்றும் ஏற்கின்றாரா? அப்படியென்றால் எங்களிடம் கேட்காமல் திருகோணமலை துறைமுகத்தில் சிங்கள மக்களைப் பெருவாரியாக இறக்க எத்தனிப்பது ஏன்?

மேலும் குறித்த சட்டம் மூலம் வடகிழக்கு இணைப்பு கிடைத்தது. சுமார் 18 வருடங்கள் அது எமது அரசியல் யாப்பில் இடம்பெற்றதன் பின்னர், (தன் ஒப்புதல் படி கட்சி அரசியல் ரீதியாக சிந்திக்கும் ஒரு பிரதம நீதியரசராலும் அவர் சொல் கேட்கும் நீதியரசர்களாலும் அந்த இணைப்பு துண்டிக்கப்பட்டது. சரியான முறையில் குறித்த இணைப்பை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? இல்லை. மாறாக அவசர அவசரமாக வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்குமிடையில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி வந்தார்கள் அரசாங்கத்தினர்.



கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற கிராமங்களைச் சுற்றிய பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம் இந்த நிமிடத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. அதாவது இரு மாகாணங்களுக்கும் இடையில் சிங்களக் குடியேற்றங்களை இருத்தி விட்டுமத்தியில் சிங்களவர்கள் வாழ்கின்றார்களே வடக்கையும் கிழக்கையும் எவ்வாறு இணைப்பது என்று கேட்பதற்காக அவசர அவசரமாக ஜனாதிபதியின் ஆளுமைக்கு உட்பட்ட மகாவலி அதிகார சபையினதும், இராணுவத்தினரதும், வெலவெலத்துப் பயந்து போயிருக்கும் மாகாணத் தமிழ் அலுவலரதும் அனுசரணையின் பேரில் இது நடைபெற்று வருகின்றது.

தக்க கருத்து வெளியிட்டால் கரும்வேலக் காட்டிற்கு மாற்றி விடுவார்கள் என்ற பயம் இந்தத் தமிழ் அலுவலர்களுக்கு என்றும் இருந்து வருகின்றது போலும்!

அடுத்து 1992 இல் அரச அதிபர், மாவட்டச்செயலர், கிராம சேவையாளர் போன்றவர்களின் மேல் இருந்த மாகாணங்களின் அதிகாரம் நீக்கப்பட்டது. அவர்கள் இப்பொழுது மத்தியின் அதிகாரத்தின் கீழ் வருகின்றார்கள். ஆகவே சமாந்திரமான இரண்டு அதிகார மையங்கள் மாகாண மட்டத்தில் ஆட்சியோட்சுவது அவருக்குத் தெரியாதா? மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் அற்ற அரசியல்வாதிகளைக் கொண்டு வந்து இணைத்தலைவர்கள் ஆக்கியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் என்பது மாகாண ரீதியாக முதலமைச்சரிடத்திலும் மத்தியின் சார்பாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் வசமே இருக்கின்றது. சட்டவாக்க உரிமை கொண்டவர்கள் சபையில் இருந்து பேச மட்டுமே முடியும். இணைத்தலைவர்கள் ஆக முடியாது அவர்களால்.

ஆனால் ஆக்கியுள்ளார் எமது கனம் பொருந்திய ஜனாதிபதி. பிரதம செயலாளர் மாகாணப் பொதுச் சேவை அலுவலர் சேவைக்குள் அடங்காது மத்தியின் கீழ் வருவது அவருக்குத் தெரியாதா?

எனக்குத் தேவையான ஒரு செயலாளரை எனது அமைச்சுக்கு நான் தேர்ந்தெடுக்க ஒரு வருடத்திற்கு மேலாகப் போராட வேண்டியிருந்தது. மத்திக்கும் மாகாண மட்ட அலுவலர்களுக்கும் இடையில் இருக்கும் நெருங்கிய உறவே இதற்குக் காரணம்.

மத்திக்கிருக்கும் அதிகாரத்தில் மதி மயங்கியவர்களே எமது மாகாண மட்ட அதிகாரிகள். அவ்வளவுக்கும் நான் கோரிய அலுவலர் முழு இலங்கை மட்டத்தில் நிர்வாக சேவைப் பரீட்சையில் 1984ல் சித்தி அடைந்த ஒருவர்.

வடமாகாணத்தில் இன்று இருக்கும் அத்தனை சிரேஷ்ட அலுவலர்களும் போதுமான அறிவிப்பு பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்காது 1991ல் அல்லது 1992 இல் போரின் போது வைக்கப்பட்ட பரீட்சையில் மாகாண மட்டத்தில் சித்தி அடைந்து வந்தவர்களே.

மாகாணமட்டத்தில் இருக்கும் மத்தியின் அதிகாரங்களையும் செல்வாக்கையும் புரிய வைக்கவே இதைக் கூறுகின்றேன். பெருமளவில் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளித்திருக்கின்றோம் என்று கூறும்போது ஜனாதிபதி தனது நாக்கைக் கொடுப்புக்குள் மடித்து வைத்துக்கொண்டு கூறியிருக்க வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் சாதாரண மக்களின் கோரிக்கை சிறந்த பொருளாதார நிலைமையே அன்றி அரச அதிகாரங்கள் அல்ல என்ற கருத்துப்பட ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை விட்டுள்ளது.

போரின் பின்னரான நிலையில் எமது மக்கள் அன்றாட தேவைகளுக்குத் திண்டாட வேண்டியுள்ளது என்பது உண்மை. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம் போதிய முதலீடுகள் வராமை மறுபுறம் செய்வதாகக் கூறப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் தாமதம் கடன் நிறுவனங்களின் கசப்பான காரியங்கள், இராணுவத்தினரின் உள்ளீடுகள் என்று பலதாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் அல்லது பாதிக்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

தரவேண்டியதைத் தராது வைத்து தாமதித்துத் தந்தால் தரங்கெட்ட மக்கள் மறந்து விடுவார்கள் தமது உரிமைகளை என்ற எண்ணத்தில் ஜனாதிபதி இவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.

எமது மக்களுக்கு வேண்டியிருந்தது பொருளாதார அபிவிருத்தியே அன்றி அரசியல் ரீதியான அதிகாரங்கள் அன்று என்று ஜனாதிபதி கூறும்போது 2013 செப்ரெம்பரில் வடமாகாண முதலமைச்சராகப் போட்டி இட்டவருக்கு எவ்வாறு 133,000க்கு மேற்பட்ட மக்கள் வாக்குகள் கிடைத்தன என்று சிந்திக்க வேண்டும்.

அப்போது ஜனாதிபதி அக்காலத்தைய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்தவர். ஜனாதிபதி மஹிந்த எவ்வாறான பொருளாதார குறையகற்றும் ஈகையில் ஈடுபட்டிருந்தார் என்று அவருக்குந் தெரிந்திருந்தது. இராணுவத்தினர் ஊடாக அள்ளி அள்ளிக் கொடுத்தாரே மஹிந்த!

ஏன் மக்கள் அவரின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கவில்லை? மக்களுக்குத் தேவைகள் இருப்பது உண்மை தான். ஆனால் எமது தமிழ் மக்களை விலை கொடுத்து வாங்கிவிட்டு அதிகா ரங்களைப் பகிராமல் இருக்க முடியும் என்று ஜனாதிபதி நினைத்தால் அவரின் அரசியல் அறிவு பற்றி சந்தேகம் எழுவது இயல்பே.

இப்பொழுதும் நான் என் மக்களுக்குக் கூறுவது அரசாங்கம் தரும் கொடைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள். பொருளாதார சலுகைகளை தாராளமாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் தேர்தல் என்று வந்தால் உங்கள் உரிமைகளுக்காகப் போராட முன்னிற்பவர்களுக்கே வாக்கு அளியுங்கள் என்று.

அப்போது அவர்கள் எங்கள் வாக்கைப் பண்டமாற்றாகக்கோரியே கொடைகள் தரப்பட்டன. வாக்களிக்காவிடில் அது துரோகம் அல்லவா? என்று கேட்பார்கள். அதற்கு நான் கூறுவது அரசாங்கமும் அரசாங்கத்துடன் இணைந்த தமிழ் மக்களும் போரின் போது உங்களுக்கு ஏற்படுத்திய அழிவுகளுக்கும், அல்லல்களுக்கும், அவலங்களுக்கும் கோடி கோடியாக நட்டஈடு உங்களுக்குத் தர வேண்டும்.

தமிழ் மக்களின் நேர்மையான, நியாயமான அரசியல் கோரிக்கைகளை உதாசீனம் செய்தே உங்கள் அனைவரையும் இவ்வாறான இக்கட்டான நிலைக்குத் தள்ளினார்கள். இப்போது வாக்குக் கேட்டு கொடைகள் தருவது எவ்வாறு நியாயமாகும்? எவ்வாறு அறமாகும்? பிள்ளையையுங் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டப் பார்க்கின்றார்கள் அல்லவா? உங்களுக்குரிய நட்ட ஈட்டை கூடுமானவரை வருத்தி அரசாங்கத்திடம் இருந்தும் அரச அடிவருடிகளிடம் இருந்தும் இவ்வாறான கொடைகள் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவர்கள் உங்கள் கடனையே திருப்பி அடைக்கின்றார்கள். உங்களுக்கென்று எதையும் புதிதாகச் செய்ய முன்வரவில்லை. உங்களை நீங்களே ஆள சட்டத்தில் இடமளிக்கவில்லை.

உங்களுக்குத் தேவையான அரசியல், பொருளாதார, கல்வி, சமூக புனரமைப்புக்களை உங்களைக் கேட்டு சட்டப்படி நகர்த்த முன்வரவில்லை.

அவர்கள் தருவதை அவர்களிடம் இருந்து எடுத்து விட்டு தமிழர்தம் உரிமைகளுக்காகப் போராடும் தகுந்தவர்களுக்கு வாக்களிப்பது பிழையல்ல என்று கூறுவேன். ஆனால் அண்மைக் காலங்களில் தகுந்தவர்கள் என்று நாம் நம்பியவர்கள் கூட தரங்கெட்டவர்களாக மாறி வருவது தமிழர்தம் தலைவிதி. அதை விரைவில் மாற்றி அமைப்போம்.

இவ்வாறான பொருளாதார நிலைமை சீர்திருத்தத்தை எம் மக்கள் தமக்கெனத் தாமே தீர்மானித்து செய்ய வேண்டுமே ஒழிய மத்தியில் உள்ளோர் இவர்களுக்குத் தேவை இதுதான் என்று தாமே முடிவெடுத்து செய்வதற்கு நாம் ஒன்றும் அவர்தம் இனத்தையோ, மதத்தையோ, மாகாணத்தையோ சார்ந்தவர்கள் அல்லர்.

நாம் தமிழர்கள். நாம் கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள். எமக்கென ஒரு பாரம்பரியம் உண்டு. தாயகம் உண்டு, தனித்துவம் உண்டு. அவற்றை மதித்து, மறுதளிக்காமல், மயக்க வார்த்தைகளைப் பாவிக்காமல் உரிய உரித்துக்கள் மூலம் தந்தாலன்றி மக்கள் மீண்டும் மீண்டும் தருவதை எடுத்துக் கொண்டு தம்மைத் தாங்கிப் பிடிக்கக் கூடிய தமிழ் பிரதிநிதிகளுக்கே வாக்களிப்பர் அவர்கள்.

இதனால் நான் என் நண்பர்கள் டக்ளஸ் தேவானந்தா, தம்பி அங்கஜன், திருமதி மகேஸ்வரன் போன்றவர்களைக் குறை கூறவரவில்லை. அவர்களால் போகக் கூடிய மட்டம் பொருளாதார அபிவிருத்தி பெறுவதை வரைக்கும் மட்டுமே என்று கூற வருகின்றேன்.

அவற்றை எடுத்துக் கொடுங்கள் எம் மக்களுக்குஎன்று தான் நான் அவர்களுக்குக் கூறுவேன். ஆனால் எமது மக்கள்தமது நிரந்தர தேவையை உணர்ந்துள்ளார்கள். அதுதான் முற்றுமுழுதான வடகிழக்கு இணைந்த சகல மட்ட அதிகாரப் பரவல்! 13வது திருத்தச் சட்டமல்ல. ★

# தமிழ்த் தேசிய அரசியற் சக்திகள் நீட்டும் நேசக் கரத்தை பற்றிப்பிடிப்பதற்கு முஸ்லிம் சமூகம் முன்வரவேண்டும்

## ரெலோ செயலாளர் நாயகம் சிறிகாந்தா கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஜூன் 10*

***தமிழ்த் தேசிய அரசியற் சக்திகள், அச்சுறுத்தலுக்கும் அவமதிப்புக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் சகோதர முஸ்லிம் சமூகத்திற்கு நீட்டும் நேசக்கரம் பற்றிப் பிடிக்கப்படுமானால், சிங்கள - பௌத்த பேரினவாதத்தை அரசியல் ரீதியாக தோற்கடிப்பது சாத்தியமானது மட்டுமன்றி, சுலப மானதும் கூட.***

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ செயலாளர் நாயகம் என்.சிறிகாந்தா.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அண்மையில் இஸ்லாமிய அடிப்படை வாதம் விடுத்திருந்த அச்சுறுத்தலை முறியடித்து, துடைத்தெறியும் நடவடிக்கைகளின் பெயரில், சிங்கள – பௌத்த பேரினவாத சக்திகள் தமது நீண்டகால நிகழ்ச்சி நிரலை முழுவீச்சுடன் முன்னெடுத்து நிற்கின்றன.

முன்னணியில் பௌத்த பிக்குகளும், பின்னணியில் அதிகார வெறிகொண்ட அரசியல்வாதிகளுமாக, சிங்கள – பௌத்த பேரினவாதம் சீறி நிற்கின்றது.

இலங்கை ஒரு சிங்கள – பௌத்த நாடு என்ற வெறிக்கூச்சல் ஆக்ரோஷத்துடன் எழுப்பப்படுகின்றது.

அவசரகால சட்ட விதிகள் அமுல் செய்யப்படுகையில், தென்னிலங்கையின் பல்வேறு இடங்களில் முஸ்லிம் பொது மக்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் எதிராக மட்டுமன்றி, பள்ளிவாசல்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட வன்முறை வெறியாட்டங்கள் அனைத்தும், சிங்கள – பௌத்தப் பேரினவாதத்துடன் கடந்த பல தசாப்தங்களாக சமரச – சகவாழ்வுக் கொள்கையை கடைப்பிடித்து வந்திருக்கும் முஸ்லிம் அரசியற் தலைமைத்துவங்களுக்கு மறக்கவும், மறுத்துரைக்கவும் முடியாத அரசியற் பாடங்களைப் புகட்டியுள்ளன.

தமிழ் மக்களைப் போலவே, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்களைப் பொறுத்த மட்டிலும், அவர்களின் சுயபாதுகாப்பு என்பது, அவர்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமான வட – கிழக்கு மாகாணங்களில் மட்டுமே சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாதது என்னும் உறைக்கும் உண்மை உலகறியச் சொல்லப்பட்டிருக்கின்றது.

யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் பறந்தோடிவிட்ட பின்னரும் கூட, புலிகளை மறக்காத – மறக்க விரும்பாத சிங்களப் பேரினவாதிகள், கடந்த உயிர்த்த ஞாயிறு, நிகழ்ந்த இஸ்லாமிய அடிப்படைவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஒட்டகங்களுக்கு விடுத்த எச்சரிக்கைகள் எல்லாம் நடந்து முடிந்த அனர்த்தங்களுக்குப் பின்னரும் கூட, பேரினவாதச் சிந்தனையில் மாற்றம் எதுவும் இல்லை என்பதையே, இந்த இலங்கைத் தீவின் சிறுபான்மை இனங்களுக்கு சொல்லாமல் சொல்லியுள்ளன.

இந்த அரசியற் சூழலில், தமிழைத்



தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களும், முஸ்லிம்களும், வேறு எதற்காக இல்லாவிடினும், தத்தமது இனங்களின் சொந்த நலனுக்காவும், சுய பாதுகாப்பிற்காகவும், இலங்கைத்தீவின் பெரும்பான்மை இனத்தின் பெயரால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சிங்கள – பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஒன்றுபட்டு எதிர்கொள்வது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சிங்கள – பௌத்த பேரினவாத அரசியல் தலைவர்கள் அனைவரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட, சிறுபான்மை மக்களின் உரிமைக் கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில், அடிப்படையில் ஒரே நிலைப்பாடு கொண்டவர்கள் என்பதை உணர்ந்து கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய அரசியற் சக்திகள், அச்சுறுத்தலுக்கும் அவமதிப்புக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் சகோதர முஸ்லிம் சமூகத்திற்கு நீட்டும் நேசக்கரம் பற்றிப் பிடிக்கப்படுமானால், சிங்கள – பௌத்த பேரினவாதத்தை அரசியல் ரீதியாக தோற்கடிப்பது சாத்திய மானது மட்டுமன்றி, சுலபமானதும் கூட.

இப்போது எம் அனைவரினதும் எதிரில் நிற்பது ஓர் வரலாற்றுச் சந்தர்ப்பம் 1961 இல் வடக்கு – கிழக்கு மாகாணங்களில், இரண்டுமாதகாலம், சிறிமா பண்டாரநாயக்கா அரசின் நிர்வாக யந்திரத்தையே ஸ்தம்பிக்க வைத்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது, நிலைநாட்டப்பட்ட தமிழர் – முஸ்லிம் ஒற்றுமையை, மீளவும் கூட்டி எழுப்புவதற்கு, அனர்த்தங்களின் நடுவிலும், கிடைத்திருக்கும் ஓர் அருமையான சந்தர்ப்பம்.

இந்தச் சந்தர்ப்பம் சரியான முறையில் பயன்படுத்தப்படுமானால், இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வைக் கூட அது நிச்சயம் நிர்ப்பந்திக்கும்.

ஆனால், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில், சுயநல – சந்தர்ப்பவாத அரசியலை – தத்தமது இனத்தின் பெயரில் வெற்றிகரமாக நடத்தி வந்திருக்கும் பல அரசியல்வாதிகளை புறந்தள்ளித்தான், சிங்கள – பௌத்த பேரினவாதத்தை இரண்டு இனங்களும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஏனெனில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தோடு சமரசம் செய்யவும், அவ்வப்போது இணங்கியும், பிணங்கியும் குடித்தனம் நடத்தவும், அத்தகையவர்கள் எப்போதும் தயாராகவே இருந்து வந்துள்ளனர் – என்றுள்ளது. (ஐ)

# புதியதோர் தலைமைத்துவம் முஸ்லிம்களுக்கு வேண்டும்!



அத்துரலிய ரத்ன தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 10

தற்போதுள்ள பிரதிநிதிகளைப் போல அல்லாது, நாட்டை நேசிக்கும் புதிய தலைமைத்துவமொன்று முஸ்லிம் சமூகத்திலிருந்து உருவாக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரரேரணைகள் வெற்றிபெறுமா என்பதை விட, மக்களின் விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பதில்தான், தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் . நாட்டில், அரசியல் கொள்கையொன்று இல்லாதது ஒரு பெரும் குறையாகவுள்ளது என்றும் அரசியல்வாதிகளுக்கென்று கொள்கைகளை வகுக்க, மதத்தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும் – என்றார். (ஐ)

# தீவிரவாத அச்சுறுத்தலை முறியடிக்க இலங்கைக்கு உதவுகின்றது இஸ்ரேல்!

கொழும்பு, ஜூன் 10

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் அச்சுறுத்தலை முறியடிப்பதற்கு, இலங்கைக்கு உதவ இஸ்ரேல் முன்வந்துள்ளது.

இஸ்ரேலின் யமாம் பயங்கரவாத ஒழிப்பு பொலிஸாரின் மூலம் இலங்கைக்கு உதவி வழங்க அந்நாடு முன்வந்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலில் தொழில்புரியும் இலங்கையர்கள், அந்த நாட்டிலுள்ள அதிகாரிகளிடம் ஐ.எஸ். தீவிரவாத அச்சுறுத்தல் குறித்து தகவல் வழங்கியுள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்தே, தமது பொலிஸ் பிரிவின் மூலம் இலங்கைக்கு உதவி வழங்க இஸ்ரேல் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகிலுள்ள பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்ரேலின் யமாம் பொலிஸாருக்கு மாத்திரமே பயப்படுகிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த யமாம் பொலிஸார் எந்த இடத்திலிருந்து செயற்படுகின்றார்கள் என்பதை இஸ்ரேல் மக்களே அறியாதுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலினால் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியொன்றும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து மஹிந்தவின் அறிக்கை விரைவில்!

## அவருடைய சந்திப்பின் பின் ஹக்கீம் கருத்து



கொழும்பு, ஜூன் 10

முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென நாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிடுவார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடிய பின்னர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து, தாங்கள் இராஜினாமா செய்த பின்புலம் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினோம்.

எங்களின் நடவடிக்கைகள் ஊடாக இனங்களுக்கிடையில் மோசமானதொரு துருவப்படுத்தல் ஏற்பட்டுவிடக்கூடாது என்று அவர்எங்களிடம் தெரிவித்தார்.

நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை என்பதையும் அவரிடம் சொல்லியிருக்கிறோம்.

அதேநேரம், ஏன் இந்த தீர்மானத்தை எடுக்கவேண்டியேற்பட்டது என்பது குறித்தும் அவருக்கு சகல விளக்கத்தையும் வழங்கியிருக்கின்றோம்.

தற்போது முஸ்லிம் சமூகம் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளில் அவர் முன்னின்று சில விடயங்களை நாட்டு மக்களுக்கு பேசவேண்டும். அதனூடாக பதற்றத்தைத் தணிப்பதற்கு அவரும் பங்களிப்புச் செய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டோம்.

இன்று நாங்கள் அவரிடம் பேசிய விடயங்களை வைத்து அவர் அறிக்கையொன்றை விடுப்பதற்குத் தயாராக இருக்கிறார் என இதன்போது எங்களிடம் தெரிவித்தார் – என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி, ரிஷாத் பதியுதீன், அலிசாஹிர் மௌலானா, எச்.எம்.எம். ஹரீஸ், அமீர் அலி, அப்துல்லாஹ் மஹ்றூப், இஷ்ஹாக் ரஹ்மான், ஏ.எல்.எம். நசீர், வீ.சி. எஸ்.எம்.எம். இஸ்மாயில் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர் தனச கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



# பங்களாதேஷை எளிதாக வீழ்த்தியது இங்கிலாந்து

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷை எளிதாக வீழ்த்தி இங்கிலாந்து அணி 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளதுடன் புள்ளிபட்டியலில் 4 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

12ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. 10 அணிகள் பங்கேற்றுள்ள இந்த கிரிக்கெட் திருவிழாவில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை-இறுதிக்கு தகுதி பெறும்.

இந்த நிலையில் கார்டிப்பில் உள்ள சோபியா கார்டனில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடந்த 12ஆவது லீக் போட்டியில் இங்கிலாந்து அணி பங்களாதேஷ் அணியை எதிர்கொண்டது.

இப்போட்டியில் நாணய சுழற்சியின் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது. இதன்படி இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ஜோனி பேர்ஸ்டோவும், ஜேசன்றோயும் களமிறங்கினர்.

சில ஓவர்கள் நிதானம் காட்டிய இவர்கள் அதன் பின்னர் பங்களாதேஷ் பந்து வீச்சை அடித்து விளையாடினர். அந்தவகையில் 15 ஆவது ஓவரில் 100 ஓட்டங்களை இங்கிலாந்து அணி பெற்றுக்கொண்டது.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 128 ஓட்டங்களை சேர்த்து. இதனை அடுத்து பேர்ஸ்டோ 51 ஓட்டங்களுடன் அட்டமிழந்து வெளியேற அடுத்து களமிறங்கிய ஜோ ரூட் மறுமுனையில் அபாரமாக விளையாடிய றோய்க்கு ஆதரவு கொடுத்தார்.

அந்தவகையில் ஜேசன் றோய் 92 பந்துகளில் தனது 9 ஆவது சதத்தை நிறைவு செய்தார். இந்த உலகக் கிண்ணத்தில் பதிவான 4 ஆவது சதம் இதுவாகும்.

இதற்கிடையே ஜோ ரூட் 21 ஓட்டங்களுடன் வெளியேற ஜேசன் றோய் 153 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினார். இதனை அடுத்து களமிறங்கிய ஜோஸ் பட்லரும், அணித் தலைவர் மோர்கனும் இணைந்து உத்வேகம் குறையாமல் அணையின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

தொடர்ந்து பட்லர் தனது பங்குக்கு 64 ஓட்டங்களையும் மோர்கன் 35 ஓட்டங்களையும் பெற்று பெவிலியன் திரும்பினர். அடுத்து வந்த வீரர்களும் குறிப்பாக கிறிஸ் வோக்ஸ் 18 ஓட்டங்களையும் பிளங்கெட் 27 ஓட்டங்களையும் அடிக்க இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்பிற்கு 386 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனை அடுத்து 387 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் விழுந்தன.

ஒரு கட்டத்தில் இலக்கை நெருங்க முடியாது என்பதை உணர்ந்த பங்களாதேஷ் அணி வீரர்கள் நிதானமாக விக்கெட்களை பறிகொடுக்காமல் விளையாடினர். அதில் சிறப்பாக விளையாடிய ஷகிப் அல்-ஹசன் 121 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து வந்த வீரர்கள் சோபிக்காதமையினால் அந்த அணி 48.5 ஓவர்களில் 280 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதுவரை விளையாடிய 3 லீக்கில் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு இது 2 ஆவது வெற்றியாகும். அத்துடன் 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடரில் பங்களாதேஷிடன் அடைந்த தோல்விக்கும் இங்கிலாந்து நேற்றுமுன்தினம் பழிதீர்த்துக் கொண்டுள்ளது. (ஐ)

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது வலைப்பாடு மெசியா அணி



ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தால் வடமாகாண ரீதியில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வலைப்பாடு மெசியா அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் மெசியா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

மெசியா அணி சார்பாக குட்டி, கொலின்ஸ் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக மெசியா அணியின் கொலின்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# ஈடன் ஹசார்ட் வருகையால் பலமடையும் ரியல் மட்ரிட்!



பிரபல உதைபந்து வீரரான ஈடன் ஹசார்ட், ஸ்பெயினின் முன்னணி கழக அணியான ரியல் மட்ரிட் கழக அணிக்கு விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் முன்னணி கழக அணியான செல்சி அணிக்கு விளையாடி வந்த 28 வயதான பெல்ஜியம் வீரர் ஈடன் ஹசார்ட், ஐரோப்பா லீக் தொடரில் செல்சி அணிக்கு இரண்டு கோல்கள் அடித்துக் கொடுத்து சம்பியன் கிண்ணத்தை வென்று கொடுத்த மன திருப்தியுடன் அணி மாறியுள்ளார்.

150 மில்லியன் பவுண்ஸ்களுக்கும் அதிகமான தொகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இவர், ரியல் மட்ரிட் அணிக்காக ஐந்து ஆண்டுகள் விளையாடவுள்ளார்.

இதன் மூலம், ஈடன் ஹசார்ட் இங்கிலீஷ் பீரிமியர் லீக் தொடரிலிருந்து லா லிகா உதைபந்து தொடருக்கு மாறியுள்ளார்.

கடந்த ஏழு வருடமாக செல்சி அணிக்கு பல கிண்ணங்களையும், வெற்றிகளையும் பெற்றுக் கொடுத்த ஈடன் ஹசார்ட், இதுவரை செல்சி அணிக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 245 போட்டிகளில் விளையாடி 85 கோல்களை அடித்துக் கொடுத்துள்ளார்.

இங்கிலாந்து சம்பியன் கிண்ணங்களை வென்ற பெருமையும், இங்கிலீஷ் பிரீமியர் லீக் தொடரில் ரொனால்டோவை விட அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற பெருமையும் ஈடன் ஹசார்ட் வசமே உள்ளது.

ரொனால்டோ அணியை விட்டுச் சென்ற பிறகு குறிப்பிடத் தகுந்த வெற்றி எதையும் பெறாத ரியல் மட்ரிட் அணி, அவரது இடத்தை ஹசார்ட் பூர்த்தி செய்ய இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

# காலிறுதிக்கு முன்னேறியது கொற்றாவத்தை சிவானந்தா



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் வதிரி டைமன்ஸ் விளையாட்டு கழகம் நடத்து வே.நகுலன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் சிவானந்தா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

சிவானந்தா அணி சார்பாக ஜெயராஜ், தனுஜன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.

# கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார் ஆஷ்லே பார்டி




2019ஆம்ஆண்டுக்கான பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று ஆஷ்லே பார்டி கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.

எதிர்பார்ப்பு மிக்க பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி, நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

இதில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டியும், செக் குடியரசின் மார்கேடா வொண்ட்ரௌசோவாவும் பலப்பரீட்சை நடத்தினர்.

இப்போட்டியில் ஆரம்பம் முதல் ஆக்ரோஷத்தை வெளிக்காட்டிய ஆஷ்லே பார்டி எவ்வித அழுத்தங்களையும் எதிர் கொள்ளாமல் 6-1, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றார். (ஐ)

## இன்றைய ஆட்டம்

ICC CRICKET WORLD CUP ENGLAND & WALES 2019

 VS 

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள்

(பிற்பகல் 3 மணி)

## தீவிரவாதத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தேன். பத்து நாட்களில் எமது இரண்டாவது சந்திப்பு இது.

தீவிரவாதம் ஒரு கூட்டு அச்சுறுத்தல். அதனைக் கூட்டாக, மையப்படுத்திய நடவடிக்கையின் மூலம் எதிர்கொள்ளவேண்டும் என ஜனாதிபதியும் நானும் இணங்கியுள்ளோம்.

பகிர்வான, பாதுகாப்பான எதிர்காலத்துக்காக இலங்கையுடன் பங்காளராக இணைந்து நிற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துகிறேன் என இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார். (ஐ)

## புதுடில்லிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு நேற்றுப் பயணம்மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு நடந்தது. இதன்போதே மோடி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் தொடக்கத்தில், மோடி இரண்டாவது முறையாகவும் பிரதமராகப் பதவியேற்றமைக்குக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாழ்த்து தெரிவித்தார். இதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார் மோடி.

முன்னதாகத் திட்டமிட்டதைவிட குறைவான நேரமே இந்தச் சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்புக்கு முன்னதாக இடம்பெற்ற மஹிந்தவுடனான சந்திப்பு சற்று நேரம் அதிகமாக இடம்பெற்றதால், இந்தச் சந்திப்பு சுமார் 7 அல்லது 8நிமிடங்கள்மட்டுமே இடம்பெற்றது.

சுதந்திரத்துக்குப் பின்னரான அரசமைப்பு தமிழ் மக்களுக்கு எதிராகவே அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கையில் தமிழர்கள் சம அந்தஸ்தில் வாழ இந்தியா ஆகக்கூடிய கரிசனை எடுத்துநடவடிக்கைஎடுக்கவேண்டுமென கேட்டுக் கொண்டது.

இந்தக் கோரிக்கையை மிகக் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்த மோடி, இது பற்றி என்னிடம் ஏற்கனவேயும் சொல்லியிருக்கிறீர்கள் என குறிப்பிட்டதுடன் கூட்டமைப்பினரை இந்தியாவுக்கு வருமாறும் அதுபற்றி விரிவாகப் பேசலாமென்றும் குறிப்பிட்டார். அத்துடன் கூட்டமைப்பின் பயண ஏற்பாட்டை உடனடியாக மேற்கொள்ளும்படி அங்கிருந்த இந்தியத் தூதரக அதிகாரிகளிடமும் அவர் பணித்தார்.

பலாலிவிமானநிலையத்தைப் பற்றியும் கூட்டமைப்பினர் மோடியிடம் எடுத்துக் கூறினர். முதலில் சிறிய விமானங்களையாவது சேவையில் ஈடுபடுத்தலாம் என அவர்கள் கேட்டுக் கொண்டனர். இதை செவிமடுத்த மோடி, இதில் கவனம் செலுத்தும்படி தூதரக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ஐ)

## மோடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில், குடை பிடித்து வரவேற்றார் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன.

ஜனாதிபதி செயலகத்தை வந்தடைந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு செங்கம்பள வரவேற்புடன் இராணுவ அணிவகுப்பு மரியாதைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கடும்மழைபெய்துகொண்டிருந்த நிலையில், இந்தியப் பிரதமரைக் கறுப்புக் குடையுடன் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன.

இதன் பின்னர் இராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இந்தியத் தேசிய கீதம் இசைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. (ஐ)

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் இயக்கப்படுகின்றது. அத்தகைய சக்திகளுக்கு எதிராக சிங்களத்தலைவர்கள்செயற்படாமல் உள்ளனர். இது வருந்தத்தக்க விடயம்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான இரா.சம்பந்தன்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத ஒழிப்பு நிறைவேற்றுச் சபையின் நிறைவேற்று அதிகாரியுமான மிலே கோனின்சஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனை நேற்று முன் தினம் சனிக்கிழமை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகத்துடன் ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர், சட்ட அதிகாரி அட்ரியா மற்றும் விசேட உதவியாளர் திரு லைலா ஆகியோரும்கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பின் தலைவருடன் அதன் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

இந்த இரு தரப்புப் பேச்சின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களின் அமுலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பில் இரா சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானங்களின் கூட்டுப் பங்காளிகள் என்பதனை மறந்தவர்களாக இலங்கை அரசு செயற்படுகின்றது. தீர்மானங்களின் முன்மொழிவுகளை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்று இரா. சம்பந்தன் விசனம் தெரிவித்தார்.

இந்த நிலைமை தொடர்பில் நாங்கள் அதிருப்தி அடைந்துள்ளோம். இது நாட்டுக்கு நல்லதல்ல. மிக விசேடமாக ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்த நிலைமை தொடர்ந்தால் அபகீர்த்தி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஓர் அரசு சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றைச் சற்றும் மதிக்காமல் செயற்படுமேயாகில் அத்தகைய நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள்சபைபோன்றஅமைப்புகளின் உருவாக்கத்துக்கான அடிப்படை நோக்கங்களைக் கேள்விக்குறியாக்கும் செயற்பாடாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும்,ஒருபுதியஅரசமைப்பை உருவாக்குவதற்காக இலங்கை நாடாளுமன்றத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்த அரசு உதாசீனம் செய்துள்ளதைச்சுட்டிக்காட்டியகூட்டமைப்பின் தலைவர், இத்தகைய தீர்மானங்களுக்கு எதிரான அரசின் செயற்பாடானது நல்லிணக்க முயற்சிகளுக்கும் கடந்த கால சம்பவங்கள் மீள்நிகழாமையை உறுதி செய்வதற்குமான பொறிமுறைகளில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களையும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் உதாசீனம் செய்யும் வகையில் செயற்படுகின்றமையானது இந்த அரசு பிறிதொரு அட்டவணையில் முன்செல்லுகின்றமைக்கான எடுத்துக்காட்டாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தற்போது அமுலில் உள்ள கடுமையான பயங்கரவாத தடைச் சட்டத்தின் பின்னணியை விளக்கிய அதேவேளை, இந்தச் சட்டத்தை பிறிதொரு சட்டத்தால் மாற்றீடு செய்வது இந்த அரசு சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் பிரதானமான ஒன்றாகும் என்பதையும், ஒரு வரைபு சட்டமூலம் இருக்கின்றபோதிலும் அது குறித்ததான முன்னெடுப்புகள் இன்னும் முற்றுப்பெறவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி அஹிம்சைப் போராட்டங்களை நடத்தியபோது தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் 1950, 1970 மற்றும் 1980 களில் அரங்கேற்றப்பட்டது என்றும், இவை தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் என்றும் இதன்போது இரா.சம்பந்தன் எடுத்துக்காட்டினார்.

சிங்களத் தலைவர்களான பண்டாரநாயக்க மற்றும் டட்லி சேனாநாயக்க ஆகியோர் தமிழ் மக்களின் தலைவரான செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உருவாக்கத்துக்கு முன் இடம்பெற்றவை. ஆயினும், சிங்களத் தலைவர்கள் அந்த ஒப்பந்தகளை மதித்து செயற்படவில்லை. அவர்கள் அவ்வாறு மதித்துச் செயற்பட்டிருந்தால் இந்த நாட்டில் ஒரு போர் ஏற்பட்டிருக்காது என்றும் இரா.சம்பந்தன் தெளிவுபடுத்தினார்.

தொடர்ச்சியாகக் கட்டமிடப்பட்ட வகையில் எமது உரிமைகளை மறுக்கும் செயலானது ஐக்கிய நாடுகளின் சமூக அரசியல் உரிமைகள் சாசனத்தை மீறும் செயலாகும். இன்று எமது விருப்புக்கு மாறாக நாம் ஆளப்படுகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் மீண்டும் ஒரு போர் உருவாகுவதை நாம் அனுமதிக்க முடியாது. போரினால் எமது மக்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளார்கள் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

சிங்கள மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதனை நாம் விரும்பவில்லை. ஆனால், துரதிஷ்டவசமாக இந்த நாடு ஒரு சில சிங்கள – பௌத்த பேரினவாதிகளால் இயக்கப்படுகின்றமையும் அத்தகைய சக்திகளுக்கு எதிராக சிங்களத் தலைவர்கள் செயற்படாமையும் வருந்தத்தக்க விடயம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போதுகருத்துத்தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்த நாட்டின் சட்டங்கள் இனங்களுக்கிடையே வித்தியாசமாக பிரயோகிக்கப்படுவதையும், விசேடமாக சட்ட அமுலாக்க நிறுவனங்கள் சிங்கள – பௌத்த கடும்போக்காளர்களின் செயற்பாடுகளைத் திட்டமிட்டமுறையில்அனுமதிப்பதையும் எடுத்துக்காட்டினார்.

நாங்கள் பிரிவுபடாத பிரிக்க முடியாத ஒன்றிணைந்த இலங்கைத் தீவுக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றோம். இந்த தீர்வை எமக்கு விரைவில் வழங்காத சந்தர்ப்பத்தில் எமது மக்கள் தமது நீண்டகால அரசியல் கோரிக்கைகள் தொடர்பில் மீளச் சிந்திக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும், இலங்கை அரசானது தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றமையை உறுதி செய்யும் வகையில் சர்வதேச சமூகம் மிக உத்வேகத்துடனும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டிக்கொண்டார்

தமது முன்மொழிவுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை உறுதிசெய்த ஐ.நாவின் உதவி செயலாளர் நாயகமும் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் பயங்கரவாத ஒழிப்பு நிறைவேற்று சபையின் நிறைவேற்று அதிகாரியுமான மிலே கோனின்சஸ், ஐ.நாவின் ஆக்கபூர்வமான பங்களிப்புத் தொடர்ந்தும் இருக்கும் என்றும் வாக்குறுதியளித்தார். (ஐ)

## ரணில்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் நரேந்திர மோடியை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்றார்.

முற்பகல் 11.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறப்பு பி.737 விமானத்தில் வந்திறங்கிய இந்தியப் பிரதமரை பிரதமர்ரணில்கைலாகு கொடுத்து வரவேற்றார்.

அதையடுத்து, மோட்டார் வாகனப் பவனியாக அவர் கொழும்பு வந்தார்.

பயணிக்கும் வழியில் பிரதமருடன் ஒரே வாகனத்தில், பயணம் செய்யும்போது தனியாகப் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தியப் பிரதமருடன் 59 பேர் கொண்ட குழுவினரும் இலங்கை வந்தனர்.

இந்தியப்பிரதமரின் பாதுகாப்பு மற்றும் மாற்றுப் பயன்பாட்டுக்காக, மற்றொரு பி–737 விமானமும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியது.

முன்னதாக, இந்தியப் பிரதமரை வரவேற்கும் பொறுப்பை ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஜனாதிபதி வழங்கியிருந்தார். இதனால் ரணில் கடும் விசனமடைந்திருந்தார் எனக் கூறப்பட்டது. (ஐ)

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும்ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடவில்லையென்றும், பொருத்தமான ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தால் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறார்எனவும்ஜனாதிபதிஅண்மையில் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் பொறுப்பையும் சஜித் பிரேமதாஸவிடமே ஜனாதிபதி ஒப்படைத்தார்.

இந்த நிலையிலேயே, ஜனாதிபதியின் தகவல் ஐ.தே.க. தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தியத் தரப்பிலும் சஜித் தொடர்பான சாதகமான நிலைப்பாடு உள்ளதாகத் தெரிகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள்ளும், பொதுமக்களிடமும் நீண்ட காலமாக அதிருப்திகள் உள்ளன. அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால், மஹிந்த தரப்பு சுலபமாக வெற்றி பெற்றுவிடும் என இந்தியாவும் கருதுவதால் சஜித்தை இந்தியத் தரப்பும் ஆதரிக்கலாமெனக் கருதப்படுகிறது.

தன்னை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகப் பிரகடனப்படுத்தும் முயற்சியில் சஜித் இறங்கியிருக்கிறார் என ஐ.தே.கவும் கருதுகிறது. நேற்று முன் தினம் அநுராதபுரத்தில் நடந்த நிகழ்வில் அவர் தன்னை ஜனாதிபதி வேட்பாளராகப் பிரகடனப்படுத்தும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

இந்த நிகழ்வில் சஜித்தின் ஆதரவாளர்கள், 'அடுத்த ஜனாதிபதிவேட்பாளரேகட்சிக்குத்தலைமை தாங்க வாருங்கள்' என்று கோசங்களை எழுப்பப்பட்டிருந்தன. இது திட்டமிட்ட செயற்பாடு எனக் கட்சிக்குள் கருதப்படுகிறது. (ஐ)

## கொழும்பு வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இருதரப்புப் பேச்சுக்களை அடுத்து, இந்தியத் தூதுவரின் இல்லமான இந்தியா ஹவுஸுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அங்கு சில சந்திப்புகள் நடத்தினார்.

முதலில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பரந்துபட்ட இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் விரிவான சந்திப்பு இடம்பெற்றது. தீவிரவாத முறியடிப்பு, பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், நெருக்கமான பிணைப்பு இருக்கவேண்டிய தேவை குறித்து நாங்கள் கலந்துரையாடினோம் என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மஹிந்த ராஜபக்ஷவுடன், பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ், தினேஸ் குணவர்த்தன, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும், இந்தியப் பிரதமருடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

## கொச்சிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவாலயத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

கட்டுநாயக்கவிமானநிலையத்தில் இருந்து கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு பிரதமர் ரணிலுடன் சென்றிருந்த இந்தியப் பிரதமர், அங்கு இறந்தவர்களின் நினைவாக மலர் செண்டு ஒன்றை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தாக்குதலின் பாதிப்புக்களை அங்கு நின்ற கொழும்பு மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கேட்டறிந்தார் மோடி.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்தியத் தூதுவர் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை மீண்டும் எழுச்சி பெறும் என்று தாம்நம்புகிறார்எனத்தெரிவித்தார்.

தீவிரவாதத்தின் பயங்கரச் செயல்களினால், இலங்கையின் ஆன்மாவைதோற்கடிக்கமுடியாது. இலங்கை மக்களுடன் இந்தியா ஒற்றுமையாக நிற்கிறது என்றும் அவர் கூறினார்.

மோடியின் வருகையையொட்டி கொச்சிக்கடைப் பகுதியில் முப்படையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மயிலிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மர்ந்த மக்களுக்கான உதவிகள் வழங்கப்படவில்லை என மயிலிட்டி பொது அமைப்புக்களின் பிரதிநிதி எம்.சிவானந்தம் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

அந்தப் பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர்கள் தமக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்து இருந்தாலும் இதுவரை அவற்றை நிறைவேற்றவில்லை.

இந்த அமைச்சர்களுடன் வந்த எமது மக்கள் பிரதிநிதிகளும் இதைப்பற்றி எதுவும் பேசாத நிலைமையே உள்ளனர். இவ்வாறு பலராலும்ஏமாற்றப்பட்டுக்கொண்டு தான் வருகின்றோம் – என்றார். (ஐ)

# அரசியல் நோக்கத்துடனேயே தெரிவுக்குழு செயற்படுகிறது

## மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 10

ஈஸ்டர்தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தமது நிலைப்பாட்டில் இருந்து விலகி இந்தக் குழு செயற்படும் காரணத்தினாலேயே தமது அணியினர் அதிலிருந்து விலகினர் எனவும் அவர் கூறினார்.

பாமன்கடையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றையடுத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உண்மையில் தெரிவுக் குழு வானது எதிர்பார்த்த ஒரு தெரிவுக் குழுவாக அமையவில்லை. அதன் செயற்பாடுகளில் இருந்து விலகியே இந்தக் குழு தற்போது செயற்பட்டு வருகிறது.

எமது தரப்பில் இருந்தும் இதற்கு சிலர் ஆரம்பத்தில் ஆதரவு தெரிவித்திருந்தாலும் புலனாய்வாளர்களை வெளிச்சம் போட்டுக்காண்பிப்பது முறையான செயற்பாடல்ல என்பதே எமது நோக்கமாகும். அரசியல் தேவைக்காக இதனைப் பயன்படுத்தக் கூடாது.

ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்று அரசியல் நோக்கத்துடன் செயற்பட்ட காரணத்தினால்தான் எமது தரப்பில் இருந்து எந்தவொரு பிரதிநிதியும் கலந்துகொள்ளவில்லை.

நாம் தற்போது பெரும் வேலைத் திட்டமொன்றை மேற்கொண்டு வருகிறோம். அதாவது, அரசுக்கு எதிராகப் பெரும் செயற்றிட்டமொன்றை நாடளாவிய ரீதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் – என்றார். (ஐ)

# முஸ்லிம் எம்.பிக்கள் மீளவும் பதவிகளை ஏற்க வேண்டும்

## பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

இராஜினாமா செய்துகொண்ட முஸ்லிம் பிரதிநிதிகளை மீண்டும், பதவியில் இணைத்துக்கொண்டு பயணிக்கவேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



பத்தேகமயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

உண்மையில் இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் சிங்கள மக்கள் ஒன்றிணைந்துள்ளார்கள். சிங்கள மக்களோடு, தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து கொண்டுள்ளார்கள்.

இந்தநிலையில்தான் கடந்த வாரம் முஸ்லிம் தரப்பினர் மட்டும் தனியாகப் பிரிந்துள்ளார்கள். இது சரியான உதாரணமாக நாம் கருதவில்லை.

வெளியேறிய முஸ்லிம் அமைச்சர்களை ஒன்றிணைக்கவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். நல்லிணக்கத்தை நோக்கியதாகவே எமது பயணம் அமைந்திருக்கும். இதற்கான வேலைத்திட்டத்தையும் நாம் ஆரம்பித்துள்ளோம் – என்றார். (ஐ)

# மட்டு. தபாற்பெட்டியில் 37 அ.அட்டைகள் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு தலைமையக தபாற்கந்தோர் தபாற்பெட்டியில் இனந்தெரியாதோரால் ஒரே தடவையில் போடப்பட்டிருந்த 37 தேசிய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய அடையாள அட்டைகளை தபாற்கந்தோர் தபால் அதிபர், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் என மட்டு. தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம். டி.தீர்காவத்துர தெரிவித்தார்.

இந்தப் தபாற்கந்தோரில் உள்ள தபாற்பெட்டியைக் கடந்த வெள்ளிக்கிழமை காலை வழமை போலத் திறந்து கடிதங்களை எடுக்கும்போது அதில் பல தேசிய அடையாள அட்டைகள் இருந்தமையை ஊழியர் அவதானித்துள்ளார்.

அதன் பின்னர், இந்த விடயத்தை தபால் அதிபர் கவனத்துக்கு கொண்டு சென்றதையடுத்து இந்த தேசிய அடையாள அட்டைகளைப் பொலிஸ் நிலையத்தில் தபால் அதிபர் ஒப்படைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யாழ். நகரப் பகுதி வீடொன்றில் பட்டப்பகலில் திருடர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.நகரில், சன நடமாட்டம் அதிகமாக உள்ள பெருமாள் கோவில் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் பட்டப்பகலில் புகுந்த திருடர்கள் 5 பவுண் நகையைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர்களான கணவன் – மனைவி வேலைக்கு சென்றிருந்த நிலையில் பிள்ளைகளும் பாடசாலைச் சென்றுள்ளனர். அந்தச் சமயம் வீட்டில் யாருமற்றவேளை புகுந்த திருடர்கள் வீட்டினுள் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி 5 பவுண் நகையைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரினால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கடைத்தொகுதிகள் காணப்படுவதுடன் , தனியார் கல்வி நிறுவனங்களும் காணப்படுகின்றமையால் பகலில் சன நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியப் பிரதமருக்கு மைத்திரி சிறப்பு பரிசு



கொழும்பு, ஜூன் 10

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமாதி நிலை புத்தர் சிலை ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்தப்புத்தர்சிலை வெண்தேக்கு மரத்தில் கையால் செதுக்கப்பட்டதாகும். இதனைச் செதுக்க இரண்டு ஆண்டுகள் பிடித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தியான முத்திரை என அழைக்கப்படும் யோக நிலையில் புத்தர் அமர்ந்திருக்கும் வகையில் இந்தச் சிலை செதுக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெற்றுக்கொண்ட இந்தியப் பிரதமர் மோடி, இந்தப் புத்தர் சிலை, ஒரு சிறப்பு நண்பரிடம் இருந்து கிடைத்த சிறப்புப் பரிசு என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# நாடு திரும்பினார் மோடி







கொழும்பு, ஜூன் 10

கடந்த 24 மணி நேரத்தில் மாலைதீவுக்கும் இலங்கைக்குமிடையிலான பயணத்தை மேற்கொண்டு 15 நிகழ்வுகளில் கலந்துகொண்ட இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் கொழும்பிலிருந்து இந்தியா நோக்கி நேற்று மாலை புறப்பட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவரை வழியனுப்பி வைத்தார். (ஐ)

# மக்களின் உரிமைகளை மைத்திரி தடுக்கமுடியாது

கொழும்பு, ஜூன் 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் மக்களின் உரிமைகளை யாராலும் தடுக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்பாக அதிகாரிகளை சாட்சியமளிக்க தேவையில்லையென ஜனாதிபதி உத்தரவிட்டமை, நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை இடைநிறுத்தும்படி சபாநாயகருக்கு தெரிவித்ததன் பின்னணியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஏன் இப்படி உத்தரவிட்டார் என்பது தனக்கு தெரியவில்லையென குறிப்பிட்ட ஆசு மாரசிங்க, ஊடகங்களின் முன் தெரிவுக்குழு விசாரணைகளை அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பானில் நடந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)


அகவை அறுபதில் ஆறுதலடையும் நண்பனுக்கு நல்வாழ்த்துக்கள்!



மகேசன் கஜேந்திரன்

B.A Sc & Maths Trd SLPS - 1

அதிபர் யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம்

ஆரம்பக்கல்வி முதல் அட்வான்ஸ்லெவல் வரை
இந்துவின் மைந்தர்கள் நாம்
ஆசிரிய சேவைமுதல் அதிபர் சேவை வரை
இந்துவின் சேவகர்கள் நாம்
ஆறுமுதல் அறுபது வரை
இனிய நண்பர்கள் நாம்
ஆறுதலிற்கு பின்னும் அன்புடன்
இணைபிரியாதிருக்க
ஞானவைரவரையும் ஞானலிங்கேசுவரரையும்
வேண்டுகின்ற
நண்பன்
சதா.நிமலன் (அதிபர்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 10.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.